02.12.15

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**கால்நடை தீவனம் இலவசம்**

விருதுநகர்,:மழை பாதித்த பகுதிகளில், கால்நடைகளுக்கான தீவனங்களை, மாவட்ட கால்நடை பண்ணைகளில் இலவசமாக வழங்க, அரசு உத்தரவிட்டுள்ளது. ஆடு, மாடுகளுக்கு நோய் ஏற்படுவதை தடுக்க, கிராமங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. கால்நடைகள் உணவின்றி தவிப்பதை தவிர்க்க, ஆடு, மாடு வளர்ப்பவர்கள், கால்நடை பண்ணைகளில் தீவனங்களை இலவசமாக பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**எண்ணெய்பனை சாகுபடியால் மாதம் ரூ.1.50 லட்சம் வருவாய்**

பாமாயில் எண்ணெய்ப்பனை சாகுபடி செய்து மாதம் ரூ.1.50லட்சம் வருவாய் ஈட்டுகிறார், தேனியைச் சேர்ந்த பொறியாளர் சங்கர் ராஜ். இந்திய தேவைக்காக மாதம் 60 முதல் 80 லட்சம் டன் பாமாயில் இந்தோனேசியா, மலேசியாவில் இருந்து இறக்குமதி செய்ப்படுகிறது. இதன்மூலம் அரசுக்கு அதிகமான அந்நிய செலாவணி செலவாகிறது. பாமாயில் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் மத்திய, மாநில அரசுகளின் மானியத்துடன் 'பாமாயில் எண்ணெய்ப்பனை சாகுபடி திட்டம்' அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மகசூலை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் அரசு நிர்ணய விலையில் கொள்முதல் செய்கிறது. விவசாயிகளுக்கு, ஒன்றரை ஆண்டுகள் வளர்ந்த பாமாயில் பனைமரக்கன்றுகளை ஒப்பந்த நிறுவனம் வழங்குகிறது. அவற்றை முக்கோண வடிவில் ஹெக்டேருக்கு 143 கன்றுகள் வீதம் நட வேண்டும். இவ்வாறு நடவு செய்த நிலத்தில் 3 ஆண்டுகள் வரை ஊடு

பயிராக வாழை, கரும்பு, காய் கறி, பயறு வகைகள் சாகுபடி செய்ய உர மானியம் அரசால் வழங்கப்படும். ஊடுபயிரால் உபரி வருமானம் கிடைக்கும். மண்ணின் தன்மைக்கு ஏற்ப மரக்கன்றுகளை சுற்றி வட்டபாத்தி அமைத்து நீர் பாய்ச்சலாம். 3 ஆண்டு களுக்கு பிறகு ஆண், பெண் பனை மரங்களில் பூக்கள் மலர்ந்து, குலை உருவாகும். நீர் காய்ச்சலும், பாய்ச்சலுமாக இருந்தால் ஆண் பனையில் குறைந்து, பெண் பனையில் மகசூல் அதிகரிக்கும். ஒரு மட்டைக்கு ஒன்று வீதம் வளரும் குலையில் நாவல்பழம் போன்ற கருப்பு நிற காய்கள் உருவாகி,பொன் சிவப்புநிற பழமாகும். ஒரு குலையில் 5 முதல் 8 கிலோ பழங்கள் கிடைக்கும். மரத்தின் வயது, பராமரிப்புக்கு ஏற்றவாறு மகசூல் கூடும். ஆரம்ப கன்னி காய்ப்பில் ஒரு வெட்டுக்கு 4 முதல் 6 டன் வரை மகசூல் கிடைக்கும்.

நன்கு பராமரித்தால் 6 வது ஆண்டில் ஒரு குலையில் 15 முதல் 30 கிலோ வரை எடையில் மகசூல் கிடைக்கும். இன்னும் தரமான குலைகளில் 60 முதல் 80 கிலோ வரை மகசூல் கிடைக்கும். ஒரு வெட்டுக்கு 35 முதல் 40 டன் மகசூல் கிடைக்கும். மரம், ஒரு ஆண்டுக்கு அரைஅடி வளரும். பழத்தை லாரியில் ஏற்றி எடை போட்டு ஒப்பந்த நிறுவனத்திடம் வழங்கிட வேண்டும். அவை அரியலூர் மில்லுக்கு கொண்டு செல்லப்பட்டு பாமாயில் தயாரிக்கப் படுகிறது. பாமாயில் பழத்திற்கான விலையை வேளாண் துறை ஆணையர், ஒப்பந்த நிறுவனம், மாவட்ட விவசாயி கொண்ட குழு நிர்ணயம் செய்யும்.ஒவ்வொரு மாதமும், மார்க்கெட்டுக்கு ஏற்ப டன் விலை நிர்ணயிக்கப்படும். கடந்த மாதம் ஒரு டன்னுக்கு ரூ.5,016 விலை கிடைத்துள்ளது. 15 நாட்களுக்கு ஒரு அறுவடை செய்யலாம். இது குறித்து கோடாங்கி பட்டி விவசாயியான இன்ஜினியர் சங்கர்ராஜ் கூறுகையில், “30 ஆண்டுகள் விவசாயம் செய்தும் லாபம் இல்லை. எண்ணெய் பனை சாகுபடியில், தென்னை சாகுபடியை விட 2 மடங்கு லாபம் கிடைக்கிறது. வேலை குறைவு. மரம் ஏற தேவையில்லை. நடவு, பராமரிப்பு மானியம் கிடைக்கிறது. 15 நாட்களுக்கு ஒரு வெட்டு. மாதம் 25 முதல் 30 டன் மகசூல் கிடைக்கிறது. 3 ஹெக்டேர் சாகுபடியால் மாதம் ரூ.1.50 லட்சம் கிடைக்கிறது. மாதம் ரூ.5ஆயிரம் மட்டுமே செலவாகிறது. மகசூல் அனுப்பிய 15 நாளில் வங்கி கணக்கில் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

இன்ஜினியரிங் தொழிலில் கிடைக்காத லாபம் எண்ணெய் பனை விவசாயத்தில் கிடைக்கிறது. கேரளா, கர்நாடகாவில் டன்னுக்கு ரூ.9 ஆயிரம் வழங்கப்படுகிறது. தமிழக அரசு குறைந்தபட்ச விலையாக டன்னுக்கு ரூ.11 ஆயிரம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறோம்," என்கிறார். **சங்கர்ராஜை தொடர்பு கொள்ள 99440 84546**

**பி.ரவி, தேனி**

**மக்காச்சோளத்தில் தண்டுத் துளைப்பான்**

பூச்சி தாக்குதலின் அறிகுறிகள்: இப்பூச்சி பெரியகுளம் தாலுகா, குள்ளபுரம், மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, நல்லகருப்பன்பட்டி, கெங்குவார்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும், தமிழ் நாட்டில் மக்காச்சோளம் பயிரிடக் கூடிய அனைத்து மாவட்டங்களிலும் இப்பூச்சி பெருத்த சேதத்தை ஏற்படுத்துகிறது. இப்பூச்சியின் புழுக்கள் 1520 நாட்கள் வயதுள்ள இளம் நாற்றுகளிலிருந்து, பயிர் முதிர்ச்சி அடையும் வரை பயிரை தாக்கக் கூடியது. முட்டைகளிலிருந்து வெளி வரும் இளம் புழுக்கள் ஆரம்பத்தில் இலைகளிலுள்ள பச்சையத்தைச் சுரண்டி உண்ணும். பின்னர் அவை தண்டைத் துளைத்து, உட்சென்று குருத்துப் பாகத்தைத் தாக்கி, திசுக்களை உண்டு, சேதத்தை விளைவிக்கின்றன. புழுக்கள் இளம் பயிரைத் தாக்கும் போது, குருத்தழிவு அறிகுறி தோன்றும். வளர்ந்த செடிகள் தாக்கப்படும் போது புதிதாக வெளிவரும் இலை விரியும் போது, நடுநரம்பின் இருபுறமும் சமதூரத்தில் துளைகள் காணப்படும். மக்காச் சோளத்தை தவிர கம்பு, சோளம், கேழ் வரகு போன்ற பயிர்களையும் இந்தப்பூச்சி பீடை தாக்கக்கூடியது. பூச்சியின் வாழ்க்கைச் சரிதம்: பெண் அந்துப்பூச்சி இலைகளின் அடிப்பரப்பில், நடுநரம்பை அடுத்து முட்டைகளை குவியல்களாக இடும். ஒரு பூச்சி 200300 முட்டைகள் இடக்கூடும். அவை செதிள்களைப் போல் தட்டையாகவும், கோள வடிவிலும் இருக்கும். முட்டைகளிலிருந்து சுமார் 7 நாட்களில் வெளிவரும் இளம் புழுக்கள் தண்டைத் துளைத்துக் கொண்டு உட்செல்லும். அவை 2530 நாட்களில் முழு வளர்ச்சியடையும். வளர்ந்த புழுக்கள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்திலும், பழுப்புநிறத் தலையைக் கொண்டு இருக்கும். அவற்றின் உடலில் கருமைநிறப் புள்ளிகள் காணப்படும். அவை தண்டில் துவாரம் உண்டாக்கி,

அதை மெல்லிய பட்டு போன்ற இழையால் மூடி பின்னர் தண்டின் உள்ளேயே கூண்டுப்புழுவாக 710 நாட்களில் அந்துப் பூச்சியாக வெளிவரும். அந்துப்பூச்சிகள் மஞ்சள் கலந்த பழுப்பு நிறத்தில் காணப்படும்.

பூச்சிக்கட்டுப்பாடு: குருத்து காய்ந்த செடிகளை உடனுக்குடன் அப்புறபடுத்தி அழித்து விட வேண்டும். விளக்குப்பொறி வைத்து அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். தோட்டங்களில் களைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். டிரைக்கோகிரம்மா மற்றும் டெலினாமஸ் இனங்களைச் சேர்ந்த முட்டை ஒட்டுண்ணிகள் முட்டைகளைத் தாக்கி அழிக்கக் கூடியவை. பிரக்கான் கைனன்சிஸ் புழு ஒட்டுண்ணிகள் புழுக்களைத் தாக்கி அழிக்கக் கூடியவை. அறுவடைக்குப் பின்னர் மக்காச் சோளத்தட்டைகளை உடனடியாக அகற்றி விட வேண்டும். புழு மற்றும் பயிர்களின் திசுக்களை துளைத்துச் செல்லும் மருந்துகளை, பரிந்துரைக்கப்பட்ட அளவு பயன்படுத்தி தெளிக்க

வேண்டும்.

**முனைவர் ரா.கோபாலகிருஷ்ணன்,**

**க.முத்துக்குமார், வே.மோகனே**

**பூச்சியியல் துறை,**

**வேளாண் தொழில்நுட்பக் கல்லூரி**

**குள்ளபுரம், தேனி625 562.**

**சின்ன சின்ன செய்திகள்**

கரும்பு சாகுபடி ஒரு பருதுண்டு தொழில்நுட்பம்: இம்முறையில் நாற்றங்கால் அல்லது தொழுஉரம் மண் கலவை நிரப்பப்பட்ட குழித்தட்டு மற்றும் பாலிதீன் பைகளில் விதைக்கப்பட்டு நாற்றங்காலில் ஒரு பரு நாற்றுகள் வளர்க்கப்படுகின்றன. இம்முறையில் ஒரு எக்டருக்கு 1 முதல் 1.5 டன் ஒரு பரு விதை மட்டுமே தேவைப்படுகிறது. ஒரு பரு துண்டு வெட்டி எடுத்தது போக மீதமுள்ள கரும்பினை வெல்லம் தயாரிப்பதற்கோ அல்லது சர்க்கரை ஆலை பயன்பாட்டிற்கோ பயன்படுத்தலாம். வழக்கமான முறையை ஒப்பிடும் போது 8090 சதவீதம் கரணை மீதப்படுத்தப்படுவதுடன், அதிக எடையுள்ள விதை கரணைகள் கையாள்வதில் ஏற்படும் சிரமமும் தவிர்க்கப்படுகிறது. நல்ல

ஆரோக்கியமான பருக்களை தேர்ந்தெடுத்துக் கொண்டு நோய் பாதிக்கப்பட்ட அல்லது சேதாரமடைந்த பருக்களை எளிதில் நீக்கி விடலாம். இம்முறையில் ஆட்செலவு பெருமளவில் குறைகிறது. ஒரு பரு துண்டுகள் வெட்டுவதற்கு இயந்திரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கால் மிதியால் இயக்கப்படும் ஒரு பரு துண்டு வெட்டும் கருவி,காற்றழுத்தத்தால் இயக்கப்படும் ஒரு பரு துண்டு வெட்டும் கருவி, மின் மோட்டாரால் இயக்கப்படும் ஒரு பரு துண்டு வெட்டும் கருவி, குழித்தட்டுகளில் ஒரு பரு துண்டுகளை இடும் கருவி, டிராக்டரால் இயங்கும் இரண்டு வரிசையில் ஒரு பரு துண்டுகளைக் கொண்டு வளர்க்கப்பட்ட கரும்பு நாற்றுகளை நடும் கருவி. மேலும் விவரங்களுக்கு : முனைவர் செ.ஜேக்கப் அண்ணாமலை, மத்திய வேளாண்மை பொறியியல் நிறுவனம் பிராந்திய மையம், கோயம்புத்தூர் 641 007.

**செம்பரப்பாக்கத்தில் 36 செ.மீ., மழைப்பதிவு**

திருவள்ளூர்: செம்பரப்பாக்கத்தில் 36 செ.மீ., மழை பதிவாகியுள்ளதாக மாவட்ட கலெக்டர் கூறியுள்ளார்.

**மீண்டும் மிரட்டும் மழை: வெள்ளக்காடானது கடலூர்**

கடந்த 2 நாட்களாக பெய்து வரும் கன மழையால் கடலூர் மாவட்டம் மீண்டும் வெள்ளக் காடாகி வருகிறது. தேசிய நெடுஞ்சாலையில் கடலூர் முதுநகர் ஐந்து கிணற்றம்மன் கோவில், பச்சையாங்குப்பம், சிப்காட், இரட்டை பிள்ளையார் கோவில் ஆகிய இடங்களில் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.கடலூர் கடலோர மாவட்டம் என்பதால் அடிக்கடி பேரிடர் ஏற்படக் கூடியதாக உள்ளது. கடந்த 25, 26, 27 ஆகிய தேதிகளில் மாவட்டத்தில் மழையின்றி, வெயில் காய்ந்தது. மீண்டும் கன மழை இருக்கும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்தும், வெயில் காய்ந்த அந்த 3 நாட்களில் கால்வாய்களை துார் வாராமல் மாவட்ட நிர்வாகம் அலட்சியப்படுத்தியது. இந்நிலையில், தற்போது இடைவிடாது பெய்யும் மழையால்கடலூர் கோண்டூர், ராம் நகர் குடியிருப்பில் மழைநீர் புகுந்ததால், வீடுகளில் அடைபட்ட பொதுமக்களை, தீயணைப்புத் துறையினர் படகு மூலம் மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்தனர்.காட்டுமன்னார்கோவில் அடுத்த வரதராஜன்பேட்டை,

ரெட்டிப்பாளையம் காலனி உட்பட 5 கிராம மக்கள் பாதுகாப்பு கருதி வெளியேற்றப்பட்டுள்ளனர்.

**மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு:**

விழுப்புரம் மாவட்டத்தில், கடந்த இரு தினங்களாக பெய்து வரும் பலத்த மழையால், மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் மரக்காணம் பகுதியில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. மரக்காணம் அடுத்த அசப்பூர் ஆற்றின் கரை உடைந்ததால், ஆலாத்துார் கிராமத்தில் மழை வெள்ளம் புகுந்தது. அனுமந்தைகுப்பம் மீனவர் குடியிருப்பு பகுதியில் வெள்ள நீர் சூழ்ந்ததால், பொதுமக்கள் படகில் மீட்கப் பட்டனர்.மண்டைவாய் புதுக்குப்பத்தில், குடியிருப்புகளை வெள்ள நீர் சூழ்ந்தது. அசப்பூர் ஆற்றில், ஐந்து ஆண்டுகளுக்குப் பின், மழை வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. காளியங்குப்பத்தில், கனமழையால் நெற் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின.செஞ்சி சங்கராபரணி ஆற்று வெள்ளத்தில், நேற்று குளிக்கச் சென்ற ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டார். செஞ்சி- செவலபுரை இடையே உள்ள தரைபாலத்தில் வராக நதியில் இருந்து வெளியேறும் தண்ணீர் வெள்ளம் போல் ஓடுவதால், 10க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

**சாலைகளில் வெள்ளம்:**

கனமழை காரணமாக, திருச்சி - சென்னை வாகன போக்குவரத்து, மாற்று பாதையில் திருப்பி விடப்பட்டது.திண்டிவனம் - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள, சிங்கபெருமாள்கோவில் பகுதியில் சாலையை மழைநீர் சூழ்ந்துள்ளது. இதனால், நேற்று மாலை, 4:00 மணி முதல், இவ்வழியாக செல்லும் சென்னை மார்க்க வாகனங்கள் அனைத்தும், தெள்ளாறு, வந்தவாசி, காஞ்சிபுரம் வழியாக திருப்பி விடப்பட்டன. சென்னை செல்லும் கனரக வாகனங்கள் தடை செய்யப்பட்டு, வந்தவாசி வழியாக திருப்பி விடப்பட்டன.உளுந்துார்பேட்டை பகுதியில், திருச்சி, சேலம் உட்பட பல்வேறு மார்க்கங்களிலிருந்து சென்னை நோக்கி செல்லும் வாகனங்கள் அனைத்தும் ஆசனுார், எலவனாசூர்கோட்டை வழியே திருப்பி விடப்பட்டன. இந்த

வாகனங்கள் எறையூர், திருக்கோவிலுார், திருவண்ணாமலை வழியாக இயக்கப்பட்டன.

## மிதக்குது நாகை :

நாகையில் கொட்டும் கனமழையால், மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.சில தினங்களாக ஓய்வெடுத்த மழை, வங்கக் கடலில் உருவான புதிய காற்றழுத்த தாழ்வு நிலையால், கடந்த இரு நாட்களாக மீண்டும் கொட்டத் துவங்கியுள்ளது.சாலைகளில் மழை, வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. நேற்று பெரும்பாலான கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததால், நகரமே வெறிச்சோடியது.நாகை, செங்கமங்கலம் இணைப்பு சாலையில் இரு இடங்களில் உடைப்பு ஏற்பட்டதால், அப்பகுதி மக்கள், 4 கி.மீ., உள்ள நாகைக்கு, 14 கி.மீ., சுற்றி வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.விளைநிலங்களில் மீண்டும் வெள்ள நீர் தேங்கி வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. பள்ளி, கல்லுாரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**வேலுார்: ஒரே நாளில் 10 பேர் சாவு:** வேலுார் மாவட்டத்தில் மீண்டும் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால், நேற்று முன்தினம் ஒரே நாளில், 10 பேர் பரிதாபமாக இறந்தனர்.வேலுார் மாவட்டத்தில் தொடரும் கனமழையால், ஏரி, குளம், ஆறு மற்றும் அணைகள் நிரம்பி வழிகிறது. பாலங்களில், தண்ணீர் வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடுவதை வேடிக்கை பார்க்க, மக்கள் ஆர்வமுடன் செல்கின்றனர்.அப்போது, ஆறுகள் மற்றும் அணை, கால்வாய்களில், பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தில் குளிக்க ஆசைப்படும் சிலர், அதில் இறங்கும்போது, தண்ணீரில் மூழ்கி இறக்கும் பரிதாப நிலை ஏற்படுகிறது.

இந்நிலையில், வேலுார் மாவட்டத்தில், நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும், 7 மாணவ, மாணவியர் உள்ளிட்ட 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். * வேலுார் மாவட்டம், காவேரிப்பாக்கத்தை சேர்ந்த தினேஷ்குமார், 14, சூர்யா,

15. இவர்கள், மகேந்திரவாடி ஏரிக்குச் செல்லும் கால்வாயில் குளித்தபோது தண்ணீரில் மூழ்கினர். இதில், தினேஷ்குமார் உயிரிழந்தார். வேலுார் சி.எம்.சி., மருத்துவமனையில், சூர்யா சிகிச்சை பெற்று வருகிறார்

* காட்பாடி தண்டலம் கிருஷ்ணாபுரம் பகுதியைச் சேர்ந்த இந்திரன், 32, தன் அண்ணன் மகள் சுஷ்மிதாவை, 7, பாலாற்றுக்கு அழைத்துச் சென்றார். அங்கு, குளித்துக் கொண்டிருந்த சுஷ்மிதா, திடீரென தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டார். அவரை காப்பாற்ற முயன்ற இந்திரனும், தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டார். பொதுமக்களின் முயற்சியால், சுஷ்மிதா மட்டும் மீட்கப்பட்டார். இந்திரனை மீட்க முடியவில்லை

* ஆற்காடு அடுத்த வேம்பி கிராமத்தைச் சேர்ந்த ரஜினி மகள் ரம்யா, 10. இவர், வாலாஜா அடுத்த அம்மணந்தாங்கலில், மாமா வீட்டு மாடியில் விளையாடினார். அப்போது, அங்கு மின்கம்பியில் கைப்பட்டதில், மின்சாரம் பாய்ந்து பரிதாபமாக இறந்தார்

* குடியாத்தம் அடுத்த ஏர்த்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த உத்திரன் மகள்கள் சுமித்ரா, 18, திவ்யா, 17 மற்றும் உறவினர் பாபு மகன் போஸ், 7 ஆகிய மூன்று பேரும், அங்குள்ள கானாற்றில் குளித்தபோது, தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக இறந்தனர்

* வேலுார் அருகே சிவநாதபுரம் குளத்தில் குளிக்கச் சென்ற, அதே பகுதியைச் சேர்ந்த சதிஷ், 19, என்பவர் நீரில் மூழ்கி இறந்தார். அவரது தம்பிகள் முரளி, 17, சந்தோஷ், 14 ஆகிய இருவரும் உயிர் தப்பினர்

* ஆற்காடு அடுத்த சாத்துார் பகுதியைச் சேர்ந்த வெங்கடேசன் மகள் அபினயா, 14. அங்குள்ள தரை கிணற்றில் தவறி விழுந்து, தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக இறந்தார்

* திருப்பத்துார் அடுத்த ஓமகுப்பத்தை சேர்ந்தவர் வேலு, 22. கூலி தொழிலாளி. அங்குள்ள ஏரியில் குளிக்க சென்றபோது, தண்ணீரில் மூழ்கி பரிதாபமாக இறந்தார்

* காட்பாடி அருகே லத்தேரி அடுத்த அரும்பாக்கத்தைச் சேர்ந்தவர் ராஜாமணி, 65. வீட்டின் சுவர் திடீரென இடிந்து விழுந்ததில், இடிபாடுகளில் சிக்கி பரிதாபமாக இறந்தார். அவரது மனைவி காயம் ஏதுமின்றி தப்பினார்.

**3 நாட்களுக்கு கனமழை தொடரும் பி.பி.சி., கணிப்பு 50 செ.மீ.,**



சென்னை: 'வங்க கடலில், நேற்று முன்தினம் உருவான குறைந்த காற்று அழுத்த தாழ்வு நிலையால், தமிழகம் மற்றும் புதுச்சேரியில், இன்னும், மூன்று நாட்களுக்கு கனமழை தொடரும்' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

'தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில், (இன்று) புதன்கிழமை, மிக, மிக கனமழை பெய்யும்' என, எச்சரிக்கப்பட்டு உள்ளது.வானிலை ஆய்வு மையம், நேற்று வெளியிட்ட அறிக்கை:தென் மேற்கு வங்க கடலில், உருவான குறைந்த காற்று அழுத்த தாழ்வு நிலை, இலங்கை அருகே, வட தமிழகத்துக்கும், புதுச்சேரிக்கும் இடையே நிலை கொண்டு உள்ளது. இதனால், டிச., 5 வரை 3 நாட்களுக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கனமழை பெய்யும். **டிச., 2:** தமிழகம், புதுச்சேரியில் கனமழை பெய்யும்.டிச., 3: தமிழக கடலோர மாவட்டங்கள், புதுச்சேரியில் மிக, மிக கனமழை பெய்யும். தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் கனமழை பெய்யும். **டிச., 4, 5:** தமிழகம், புதுச்சேரியில் மிக கனமழை பெய்யும்.சென்னையில் அடுத்த, 48 மணி நேரத்துக்கு வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். பரவலாக, மிக கனமழை பெய்யும். காற்று மிக பலமாக வீசும். கடல் சீற்றம் அதிகமாக இருப்பதால், மீனவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சென்னையில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை 8:30 மணி வரை, 4 செ.மீ., மழை பெய்தது. காலை, 8:30

மணி முதல், மாலை, 6:00 மணி வரை, 14 செ.மீ., மழை பதிவானது. சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில், குறைந்தபட்ச வெப்ப நிலை, 23 டிகிரி செல்சியஸ். சமவெளி பகுதியில், தர்மபுரியில் மிக குறைவான வெப்ப நிலை பதிவானது. அங்கு அதிகபட்ச வெப்பநிலையே, 19 டிகிரி செல்சியஸ் தான். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**பி.பி.சி., அறிக்கை:**

லண்டன் பி.பி.சி., செய்தி நிறுவனம், சென்னை மழை குறித்து, நேற்று வெளியிட்ட அறிக்கையில், 'டிச., 1, 2ல், சென்னையில் கனமழை பெய்யும். இந்த, இரண்டு நாட்களில் மட்டும், 50 செ.மீ., மழை, சென்னை மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் பதிவாகும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொது விடுமுறை நாட்கள் 2016 ல் எவ்வளவு; அரசு அறிவிப்பு**

சென்னை: வரும், 2016ம் ஆண்டுக்கு, 23 நாட்கள் பொது விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.அவற்றின் விபரம்: * வங்கிகள் ஆண்டு கணக்கு முடிப்பு விடுமுறை, தமிழகத்தில் உள்ள வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டும் பொருந்தும்.* தமிழக அரசு கட்டுப்பாட்டில் உள்ள, அனைத்து அலுவலகங்களுக்கும், அனைத்து சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை.* அரசு பொது விடுமுறை நாள், நான்கு ஞாயிற்றுக் கிழமையிலும், இரண்டு சனிக்கிழமையிலும் வருகிறது.* பொங்கல் பண்டிகைக்கு, தொடர்ந்து மூன்று நாள் விடுமுறை
* அக்டோபரில், தொடர்ந்து மூன்று நாட்கள் உட்பட, 5 நாட்கள் விடுமுறை வருகிறது.* 2015ம் ஆண்டு, 24 நாட்கள் அரசு பொது விடுமுறை நாட்கள்; 2016க்கு, 23 நாட்கள் மட்டுமே. அதிலும், வங்கி கணக்கு முடிப்பு நாள், நான்கு ஞாயிறு, இரண்டு சனிக்கிழமை, ஆகியவற்றை நீக்கினால், 16 நாட்கள் மட்டுமே, பொது விடுமுறை நாட்களாக உள்ளது.

| பொது விடுமுறை நாட்கள் | தேதி | கிழமை |
|---|---|---|
| ஆங்கில புத்தாண்டு | 1.1.16 | வெள்ளி |
| பொங்கல் | 15.1.16 | வெள்ளி |
| திருவள்ளுவர் தினம் | 16.1.16 | சனி |
| உழவர் திருநாள் | 17.1.16 | ஞாயிறு |
| குடியரசு தினம் | 26.1.16 | செவ்வாய் |
| புனித வெள்ளி | 25.3.16 | வெள்ளி |
| ஆண்டு கணக்கு முடிப்பு/ வணிக வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகள் | 1.4.16 | வெள்ளி |
| தெலுங்கு புத்தாண்டு | 8.4.16 | வெள்ளி |
| தமிழ் புத்தாண்டு மற்றும் அம்பேத்கர் பிறந்த தினம் | 14.4.16 | வியாழன் |
| மகாவீர் ஜெயந்தி | 19.4.16 | செவ்வாய் |
| மே தினம் | 1.5.16 | ஞாயிறு |
| ரம்ஜான் | 7.7.16 | வியாழன் |
| சுதந்திர தினம் | 15.8.16 | திங்கள் |
| கிருஷ்ண ஜெயந்தி | 25.8.16 | வியாழன் |
| விநாயகர் சதுர்த்தி | 5.9.16 | திங்கள் |
| பக்ரீத் | 13.9.16 | செவ்வாய் |
| காந்தி ஜெயந்தி | 2.10.16 | ஞாயிறு |
| ஆயுத பூஜை | 10.10.16 | திங்கள் |
| விஜயதசமி | 11.10.16 | செவ்வாய் |
| முகரம் | 12.10.16 | புதன் |
| தீபாவளி | 29.10.16 | சனி |
| மிலாதுநபி | 12.12.16 | திங்கள் |
| கிறிஸ்துமஸ் | 25.12.16 | ஞாயிறு |

**140 அடியை எட்டுகிறது முல்லைப் பெரியாறு அணை: முதல் கட்ட எச்சரிக்கை**



கூடலூர்: முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் 140 அடியை எட்டுவதால், இன்று வல்லக்கடவு, வண்டிப்பெரியார் கரையோரப் பகுதியில் வசிப்பவர்களுக்கு முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுகிறது.முல்லைப் பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் கடந்த சில தினங்களாக பெய்த பலத்த மழையால், அணையின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்தது. நேற்று காலை நிலவரப்படி நீர்மட்டம் 139.50 அடியாக இருந்தது அணைக்கு நீர்வரத்து 2555 கன அடியாகவும், தமிழகப்பகுதிக்கு நீர்திறப்பு 511 கன அடியாகவும் உள்ளது. நீர் இருப்பு 7000 மில்லியன் கன அடியாகும்.சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி, பெரியாறு அணையில் 142 அடி வரை தண்ணீரை தேக்கலாம். 142 அடிக்கு மேல் வரும் தண்ணீர், அணையை ஒட்டியுள்ள 13 ஷட்டர்கள் வழியாக வெளியேறி வல்லக்கடவு, வண்டிப்பெரியாறு வழியாக இடுக்கி அணையில் சேரும். இன்று பெரியாறு அணையின் நீர்மட்டம் 140 அடியை எட்டி விடும் என்பதால், வல்லக்கடவு, வண்டிப்பெரியாறு கரையோரப்பகுதியில் வசிப்பவர்களுக்கு முதல்கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுகிறது. நீர்மட்டம் 141 அடியை எட்டும்போது இரண்டாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கையும், 142 அடியாகும் போது இறுதிகட்ட அபாய எச்சரிக்கையும் விடப்படும்.

**சென்னையில் 100 ஆண்டுகளில் இல்லாத கனமழை**

**சென்னை** : கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சென்னையில் மழை கொட்டித்தீர்த்து வருகிறது. கனமழை காரணமாக சாலையில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

**வெள்ளக்காடாக சென்னை** : சென்னை நகரில் பெய்து வரும் கனமழையால் நகரமே தண்ணீரில் மிதக்கின்றது. பல பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. கொற்றலை, அடையாறு, ஆரணி, பாலாறு ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் பெரும்பாலான சாலைகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள் பலவற்றிற்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. அண்ணா பல்கலை, அண்ணாமலை பல்கலை,

திருவள்ளூர் பல்கலை, சென்னை மாநிலக் கல்லூரியில் நடைபெறவிருந்த தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. மழை நீரில் சிக்கியவர்களை மீட்க, மீட்புக்குழுவினருடன் இணைந்து ராணுவத்தினரும், கப்பற்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

**ஒரே நாளில் 256 மி.மீ., மழை பதிவு** : சென்னை அதன் சுற்று வட்டாரங்களில் நேற்று(01-12-15) காலை 8.30 மணி முதல் தற்போது வரை தொடர்ச்சியாக கனமழை பெய்து வருகிறது. இதில் சென்னையில் மட்டும் சராசரியாக நேற்று ஒரே நாளில் 256 மி.மீ., மழை பதிவானது. சென்னை நுங்கம்பாக்கம் பகுதியில் நேற்று காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை 118 மி.மீ., மழையும், மீனம்பாக்கத்தில் 175 மி.மீ., மழையும் பதிவாகியுள்ளது.

**மேலும் 4 நாள்களுக்கு மழை** : இந்நிலையில் வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு நிலை நீடித்து வருவதால் மேலும் நான்கு நாள்களுக்கு பலத்த மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

**பாஸ்போர்ட் சேவை மையங்களுக்கு விடுமுறை** : கனமழை காரணமாக, சென்னையில் மூன்று இடங்களில் உள்ள பாஸ்போர்ட் சேவை மையங்களுக்கு அடுத்த 2 நாள்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்களில் நேர்முகத்துக்கு முன்பதிவு செய்தவர்கள் வேறு நாட்களில் முன்பதிவைப் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**அரையாண்டு தேர்வுகள் ஒத்திவைப்பு** : வடகிழக்கு பருவமழை காரணமாக வரும் 7-ஆம் தேதி நடைபெறவிருந்த அரையாண்டுத் தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாகவும் இந்தத் தேர்வுகள் ஜனவரி முதல் வாரத்தில் நடைபெறும் எனவும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

**பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை**: சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, திருவாரூர், நாகை, வேலூர் ஆகிய 9 மாவட்டங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று(டிச., 2) விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி, காரைக்காலிலும் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**ரயில்கள் ரத்து** : சென்னை எழும்பூரிலிருந்து புறப்படவேண்டிய 12 எக்ஸ்பிரஸ் ரயில்கள் இன்று ரத்து செய்யப்படுவதாக தென்னக ரயில்வே அறிவித்துள்ளது. சென்னை-குருவாயூர் ரயில், புவனேஸ்வர்-புதுச்சேரி ரயில் ஆகிய ரயில்கள் இன்று மாற்றுப்பாதையில் இயக்கப்படவுள்ளன. மேலும் பல ரயில்கள் ரத்தாக வாய்ப்புள்ளதாக அறிவித்துள்ள ரயில்வே துறையினர், அவ்வாறு ரத்தாகும் பட்சத்தில் பயணிகளுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்படும் எனவும் கூறியுள்ளது.

**விமானநிலையம் மூடல்**: சென்னை விமான நிலையத்திலிருந்து புறப்படவேண்டிய, வரவேண்டிய 50 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. விமான ஓடுபாதையில் தேங்கிய மழை நீரை அகற்றும் பணியில் தொய்வு ஏற்பட்டதன் காரணமாக காலை 10 மணி வரையிலான விமான போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். விமானநிலையம் மூடப்பட்டு, விமான நிலையத்தில் தவித்து வரும் 1,500 பயணிகள் பத்திரமாக தங்க வைக்கப்பட்டு, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**வெள்ளக்காடான புதுச்சேரி**

புதுச்சேரி,:புதுச்சேரியில் நேற்று முன்தினம் இரவு முதல் கனமழை கொட்டி வருகிறது. நகர வீதிகள் வெள்ளக்காடாகி, தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதால், நகரின் முக்கிய வீதிகளில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. புதுச்சேரி பகுதியில் உள்ள 60 ஏரிகள் நிரம்பியது.மழை பாதித்த பிற மாவட்டங்கள் நிலவரம்:கடலூார் கடந்த, இரண்டு நாட்களாக பெய்து வரும் கன மழையால் கடலூார் மாவட்டம் மீண்டும் வெள்ளக் காடாகி வருகிறது. தேசிய நெடுஞ்சாலையில் கடலூார் முதுநகர் ஐந்து கிணற்றம்மன் கோவில், பச்சையாங்குப்பம், சிப் காட், இரட்டை பிள்ளையார் கோவில் ஆகிய இடங்களில் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. கடந்த, 25, 26, 27 ஆகிய தேதிகளில் மாவட்டத்தில் மழையின்றி, வெயில் காய்ந்தது. மீண்டும் கன மழை இருக்கும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்தும், வெயில் காய்ந்த அந்த, மூன்று நாட்களில் கால்வாய்களை துார் வாராமல் மாவட்ட நிர்வாகம் அலட்சியப்படுத்தியது. தற்போது இடைவிடாது பெய்யும் மழையால் கடலூார் கோண்டூர், ராம் நகர் குடியிருப்பில் மழைநீர்

புகுந்ததால், வீடுகளில் அடைபட்ட பொதுமக்களை, தீயணைப்புத் துறையினர் படகு மூலம் மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்தனர்.

விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டத்தில், மரக்காணம் பகுதியில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. மரக்காணம் அடுத்த அசப்பூர் ஆற்றின் கரை உடைந்ததால், ஆலாத்துார் கிராமத்தில் மழை வெள்ளம் புகுந்தது. அனுமந்தைகுப்பம் மீனவர் குடியிருப்பு பகுதியில் வெள்ள நீர் சூழ்ந்ததால், பொதுமக்கள் படகில் மீட்கப் பட்டனர்.மண்டைவாய் புதுக்குப்பத்தில், குடியிருப்புகளை வெள்ள நீர் சூழ்ந்தது. அசப்பூர் ஆற்றில், ஐந்து ஆண்டுகளுக்குப் பின், மழை வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. காளியங்குப்பத்தில், கனமழையால் நெற் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கின.

நாகப்பட்டினம்

நாகையில் கொட்டும் கனமழை யால், சாலைகளில் மழை, வெள்ள நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. நேற்று பெரும்பாலான கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்ததால், நகரமே வெறிச்சோடியது.

நாகை, செங்கமங்கலம் இணைப்பு சாலையில் இரு இடங்களில் உடைப்பு ஏற்பட்டதால், அப்பகுதி மக்கள், 4 கி.மீ., உள்ள நாகைக்கு, 14 கி.மீ., சுற்றி வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

விளைநிலங்களில் மீண்டும் வெள்ள நீர் தேங்கி வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தஞ்சாவூர்

டெல்டா மாவட்டங்களில், பெய்து வரும் தொடர் மழையால், சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்கள் அழுகும் நிலையில் உள்ளதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

காவிரி டெல்டா மாவட்டங்களான, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் கடந்த, இரண்டு நாட்களாக பலத்த மீண்டும் மழை பெய்து வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் தொடர்ந்து பெய்த பலத்த மழையால், மொத்தம், 205 ஹெக்டேரில் சம்பா, தாளடி பருவ நெல் பயிர்கள்

நீரில் மூழ்கின.

அதிகபட்சமாக திருவையாறில், 80 ஹெக்டேரிலும், ஒரத்தநாட்டில், 46 ஹெக்டேரிலும், நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

திருவாரூர்

திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி, திருத்துறைபூண்டி மற்றும் முத்துப்பேட்டை பகுதிகளில், 250 ஏக்கரிலும், நாகை மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம் ஆகிய பகுதிகளில், 200 ஏக்கரிலும் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. தொடர் மழையால் தற்போது வயலில் இருக்கும் தண்ணீரை வெளியேற்றுவதில் சிக்கல் இருக்கும் நிலையில், பயிர்கள் அழுகும் தன்மையை எட்டியுள்ளதாக விவசாயிகள் வேதனையுடன் கூறினர். என்.எல்.சி.,யில் பாதிப்பு

கடலூர் மாவட்டம், நெய்வேலியில் இயங்கி வரும் என்.எல்.சி.,யில் ஏற்கனவே நிலக்கரி வெட்டியெடுக்கும் பணி தடை பட்டதால் மின் உற்பத்தியில் சுணக்கம் ஏற்பட்டது.

இந்நிலையில், கடந்த மூன்று தினங்களாக நெய்வேலி நகரில் கனமழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காலை, 8:00 மணி முதல் நேற்று காலை, 8:00 மணி வரை 8 செ.மீ., மழை கொட்டியதால், மூன்று சுரங்கங்களிலும் மழைநீர் தேங்கியுள்ளது.

மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவால் சுரங்கங்களிலிருந்து மழைநீர் வெளியேற்றுவது நிறுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே, பரவனாற்றில் என்.எல்.சி., சுரங்கத்திலிருந்து மழைநீரை வெளியேற்றுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இதையடுத்து, வருவாய் துறையினர் பரவனாறு, வாலாஜா ஏரியை ஆய்வு செய்து, பரவனாற்றில் மழை நீர் மட்டுமே செல்வது உறுதி செய்யப்பட்டது.

சுரங்கங்களில் மழை நீர் தேங்கியுள்ளதால், நிலக்கரி வெட்டி எடுக்கும் பணி முற்றிலுமாக தடைபட்டுள்ளது. இருப்பினும், பங்கர் மற்றும் அனல் மின் நிலையங்களில் சேமித்து வைத்துள்ள, 8 லட்சம் டன் நிலக்கரி இருப்பு உள்ளது. அவை ஈரமாகவும், சேறு கலந்தும் உள்ளதால் மின் உற்பத்திக்கு பயன்படுத்த முடியாத நிலையில், மின் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. என்.எல்.சி.,யில் உற்பத்தியாக வேண்டிய, 2,990 மெகாவாட் மின்சாரத்திற்கு,

தற்போது பெய்து வரும் தொடர் மழை காரணமாக, 1,004 மெகாவாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மழை நீடித்தால், மின் உற்பத்தி மேலும் குறைய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.வேலுாரில் க0 பேர் பலி வேலுார் மாவட்டத்தில் தொடரும் கனமழையால் நீர் நிலைகள் நிரம்பி வருகின்றன. பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தை வேடிக்கை பார்க்க குவிந்த மக்கள் பல்வேறு பகுதியில் நீரில் சிக்கி இறந்தனர். மேலும் மின்சாரம் தாக்கியும், இடிபாடுகளில் சிக்கியும் நேற்று முன்தினம் மட்டும் க0 பேர் பலியாகினர்.

**போக்குவரத்து மாற்றம்**

கனமழை காரணமாக, திருச்சி - சென்னை வாகன போக்குவரத்து, மாற்று பாதையில் திருப்பி விடப்பட்டது. திண்டிவனம் - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள, சிங்கபெருமாள்கோவில் பகுதியில் சாலையை மழைநீர் சூழ்ந்துள்ளது. இதனால், நேற்று மாலை, 4:00 மணி முதல், இவ்வழியாக செல்லும் சென்னை மார்க்க வாகனங்கள் அனைத்தும், தெள்ளாறு, வந்தவாசி, காஞ்சிபுரம் வழியாக திருப்பி விடப்பட்டன. சென்னை செல்லும் கனரக வாகனங்கள் தடை செய்யப்பட்டு, வந்தவாசி வழியாக திருப்பி விடப்பட்டன.உளுந்துார்பேட்டை பகுதியில், திருச்சி, சேலம் உட்பட பல்வேறு மார்க்கங்களிலிருந்து சென்னை நோக்கி செல்லும் வாகனங்கள் அனைத்தும் ஆசனுார், எலவனாசூர்கோட்டை வழியே திருப்பி விடப்பட்டன. இந்த வாகனங்கள் எறையூர், திருக்கோவிலுார், திருவண்ணாமலை வழியாக இயக்கப்பட்டன.

**பெரியாறு வைகை பாசன விவசாயிகள் மகிழ்ச்சி:நீரை சிக்கனமாக பயன்படுத்த வலியுறுத்தல்**



மேலுார்:மேலுார் பகுதி பெரியாறு வைகை ஒரு போக பாசன பகுதி. அணையில் 6 ஆயிரம் மி.க., அடி இருந்தால், ஒரு போக சாகுபடிக்கு செப்.,15ல் தண்ணீர் திறக்க வேண்டும் என்பது விதி. அணையில் போதுமான நீர் இல்லாததால், இரண்டரை மாதம் கழித்து பாசனத்திற்கு நீர் திறந்து விடப்பட்டுள்ளது.பெரியாறு வைகை ஒரு போக பாசனத்திற்கு நேற்று முன்தினம் திறக்கப்பட்ட தண்ணீர், நேற்று மேலுாரை வந்தடைந்தது.விவசாய சங்கத் தலைவர் முருகன் தலைமையில், பொருளாளர் ஜெயபால், செயலாளர் ரவி உள்ளிட்ட விவசாயிகள், நாவினிப்பட்டியில் உள்ள பெரியாற்று கால்வாயில் மலர்துாவி வரவேற்றனர். இனிப்பு கொடுத்து கொண்டாடினர்.

தற்போது பருவமழை பெய்யும் காலம் முடிவடைய உள்ளதாலும், இரண்டு மற்றும் ஒரு போகத்திற்கு ஒரே நேரத்தில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும் விவசாயிகள் குறுகிய கால நெல்ரகங்களை தேர்வு செய்து பயனடைய வேண்டும் என விவசாயிகள் சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், நீர் மறைய நீர் கட்டு(வயலில் ஒரு நேரத்தில் தண்ணீரை சேமித்து வைக்காமல், தேவைக்கு ஏற்ப நீர் உலர்ந்த பிறகு நீரை பாய்ச்சுவது) என்ற முறையில் தண்ணீரை வீணாக்காமல் சிக்கனமாக பாய்ச்சி பயனடைய வேண்டும் எனவும் வலியுறுத்தி உள்ளனர்.

**அமராவதி அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு! 55 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறும்**

உடுமலை: உடுமலை அமராவதி அணையிலிருந்து புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசன நிலங்களுக்கு, நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், திருப்பூர், கரூர் மாவட்டத்திற்குட்பட்ட, 55 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

உடுமலை அமராவதி அணைக்கு, வடகிழக்கு பருவமழை சீசன் துவங்கியதும், நீர் வரத்து அதிகரித்தது. பாசனத்திற்கு அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படாததால், நீர் மட்டம், வேகமாக உயர்ந்து, அணை நிரம்பும் நிலையை நோக்கி சென்றது.

இந்நிலையில், சம்பா பருவ நெல் சாகுபடி மற்றும் கரும்பு சாகுபடி பணிகளுக்காக, அணையிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என ஆயக்கட்டு விவசாயிகள் கடந்த இரு வாரங்களாக தொடர் கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து, அரசு உத்தரவு அடிப்படையில், நேற்று அணையிலிருந்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன நிலங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு கீழ் மட்ட ஷட்டர் வழியாக, வினாடிக்கு, 400 கன அடியாக ஆற்றிலும், புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு, பிரதான கால்வாயில், வினாடிக்கு, 350 கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டது.

உடுமலை, மடத்துக்குளம், தாராபுரம், கரூர், அரவக்குறிச்சி தாலுகா பகுதிகளில் அமைந்துள்ள பழைய ஆயக்கட்டு பாசன நிலங்களுக்கு, 10 நாட்கள் தண்ணீர் திறப்பு, 5 நாட்கள் அடைப்பு என்ற முறையில், மூன்று நனைப்புகளுக்கு, 2,592 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்பட உள்ளது.

புதிய ஆயக்கட்டிலுள்ள, 25,250 ஏக்கர் நிலங்களுக்கு, 7 நாட்கள் திறப்பு; 5 நாட்கள் அடைப்பு என்ற அடிப்படையில், மூன்று நனைப்புகளுக்கு, 978.33 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்படும்.

நேற்றைய காலை நிலவரப்படி, அணையின் நீர் மட்டம், 90 அடியில், 88.27 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 724 கன அடியாக இருந்தது. அணைப்பகுதியில், 9 மி.மீ., மழையளவு பதிவாகியிருந்தது.

தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில், கலெக்டர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். மடத்துக்குளம் எம்.எல்.ஏ., சண்முகவேலு பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கும், எம்.எல்.ஏ.,க்கள், நடராஜன் (காங்கேயம்), ராமலிங்கம்(ஈரோடு மேற்கு), பொன்னுசாமி (தாராபுரம்), புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கும் தண்ணீர் திறந்து விட்டனர்.

**பிச்சாட்டூர் ஏரியில் இருந்து 11,000 கன அடி நீர் திறப்பு**

ஊத்துக்கோட்டை:பிச்சாட்டூர் ஏரியில் இருந்து வினாடிக்கு, 11 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டதால், ஆரணி ஆற்றில் மீண்டும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

இரண்டு வாரங்களாக பெய்த கனமழையால் ஆரணி ஆற்றில் கட்டப்பட்ட பிச்சாட்டூர் ஏரி நிறைந்தது. இதன் முழு கொள்ளளவான, 31 அடியில் தற்போது, 30.50 அடி தண்ணீர் உள்ளது.

மூழ்கிய தரைப்பாலம்மொத்த கொள்ளளவான, 1.85 டி.எம்.சி., யில் தற்போது, 1.72 டி.எம்.சி., உள்ளது. இந்நிலையில், இரு தினங்களாக பெய்து வரும் கனமழையால் ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் இருந்து நீர்வரத்து வருகிறது.

இதனால் நேற்று முன்தினம் இரவு, வினாடிக்கு, 7,000 கன அடி வீதம் திறக்கப்பட்ட நீர், தற்போது வினாடிக்கு, 11,000 கன அடி வீதம் திறக்கப்பட்டது.இதன் காரணமாக ஆரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. ஊத்துக்கோட்டை அடுத்த, நந்தனம் மற்றும் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் இருந்து தண்ணீர் ஆரணி ஆற்றில் கலக்கிறது. இதனால் வெள்ளப் பெருக்கு மேலும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக சுருட்டப்பள்ளி, சிட்ரபாக்கம், பனப்பாக்கம், செங்காத்தாகுளம், பாலேஸ்வரம் ஆகிய அணைக்கட்டுகளும் நிரம்பி வழிகின்றன. ஊத்துக்கோட்டை தரைப்பாலம் மூழ்கிய தால் போக்குவரத்துநிறுத்தப்பட்டது.

எதிர்பார்ப்பு:பாலேஸ்வரம் அணைக்கட்டில் இருந்து வினாடிக்கு, 20,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் பெரியபாளையம் பகுதியில் ஆற்றின் கரையோரம் உள்ளவர்கள் வேறு இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேலும், ஊத்துக்கோட்டை பெரியபாளையம் சாலையில், பேரண்டூர், எல்லம்பேட்டை ஆகிய பகுதிகளில் சாலையில் மழைநீர் செல்கிறது. பிச்சாட்டூர் ஏரியில் நீர்ப்பிடிப்பு பகுதி யில் தொடர்ந்து மழை பெய்தால் வெளியேற்றப்படும் நீரின் அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மதுராந்தகம் ஏரியிலிருந்து 20,000 கன அடி நீர் வெளியேற்றம்**

செங்கல்பட்டு:மதுராந்தகம் ஏரியிலிருந்து, வினாடிக்கு 20 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றம் செய்யப்படுகிறது என, பொதுப்பணி துறை அதிகாரிகள்தெரிவித்தனர்.

மதுராந்தகம் ஏரியின் மொத்த கொள்ளளவு,609 மில்லியன் கன அடி: அழம் 21:3 அடி: கரையின் நீளம் 12,900 அடி: ஐந்து மதகுகள் உள்ளன. உயரம், 24:3 அடி. தற்போது, 23.3 அடி தண்ணீர் உள்ளது. திருவண்ணமாலை மாவட்டம், கிளியாறு, நெல்வாய் மடுவிலிருந்து ஏரிக்கு நீர்வரத்து கூடியுள்ளது.

இதனால், கடந்த 23ம் தேதி ஏரியிலிருந்து வினாடிக்கு, 18 ஆயிரம் கன அடி நீரும், 24ம் தேதி 20,400 கனஅடி நீரும், 25ம் தேதி 17,600 கன அடி நீரும், 26ம் தேதி 10 ஆயிரம் கனஅடி நீரும், 27ம் தேதி 5,000 கன அடி நீரும், 28ம் தேதி 1250 கனஅடி நீர் ஏரியிலிருந்து வெளியேற்றம் செய்யப்பட்டது.

கடந்த 29ம் தேதி, நீரின் வரத்து குறைந்ததால், ஏரியிலிருந்து வெளியேற்றம் நிறுத்தப்பட்டது. கடந்த 30ம் தேதி, 2,600 கனஅடி நீர் வெளியேற்றம் செய்யப்பட்டது.இந்நிலையில், நேற்று, கிளியாறு, நெல்வாய் மடுவிலிருந்து, வினாடிக்கு 20 ஆயிரம் கடி அடி நீர் வருவதால், அதே அளவு நீர் கலங்கல் வழியாக வெளியேற்றப்படுகிறது என, பொதுப்பணி துறை அதிகாரிகள் தெரிவித்தனர்..

**சாய்கங்கை கால்வாயில் நீர்வரத்து அதிகரிப்பு**

ஊத்துக்கோட்டை:சாய்கங்கை கால்வாய் முழுவதும் தண்ணீர் செல்வதால், அதன் மேல் அமைக்கப்பட்ட மேம்பாலத்தின் வழியே செல்லும் வாகனங்கள் சத்தியவேடு வழியாக திருப்பி விடப்பட்டன.

தமிழகம், ஆந்திர மாநிலத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக சாய்கங்கை கால்வாயில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. நேற்று காலை, 6:00 மணி நிலவரப்படி, வினாடிக்கு, 350 கன அடி வீதம் ஊத்துக்கோட்டை ஜீரோபாயின்ட்டில் வந்தது.

மதியம், 1:00 மணி முதல் ஊத்துக்கோட்டை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் கன மழை பெய்தது. இதன் காரணமாக ஜீரோபாயின்ட்டிற்கு வினாடிக்கு, 700 கன அடியாக உயர்ந்தது. தொடர்ந்து மழை பெய்ததால், நீர்வரத்து அதிகரித்து நேற்று மாலை, 06:00 மணி நிலவரப்படி, வினாடிக்கு, 850 கன அடி வீதம் வந்தது.

தற்போது கால்வாய் முழுவதும் தண்ணீர் செல்கிறது. இந்நிலையில், ஊத்துக்கோட்டை அடுத்த அம்பேத்கர் நகரில், சாய்கங்கை கால்வாய் மேல் மேம்பாலம் அமைக்கப்பட்டு உள்ளது. தண்ணீர் அதிகமாக செல்லும் நிலையில், பழுதடைந்து காணப்படும் இந்த மேம்பாலம் வழியே வாகனங்களை இயக்கினால் விபத்துகள் ஏற்படும் அபாயம் தோன்றியது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, நேற்று, இரவு, 7:00 மணி முதல், இந்த பாலத்தின் வழியே போக்குவரத்து நிறுத்தப்பட்டது. ஆந்திராவில் இருந்து ஊத்துக்கோட்டை வழியாக சென்னை செல்லும் அனைத்து வாகனங்களும் சத்தியவேடு வழியாக திருப்பி விடப்பட்டன.

இதனிடையே, சத்தியவேடு அருகே ராஜலுகண்டிகை கிராமத்தில் சாலையில் அதிக தண்ணீர் செல்வதால் அங்கும் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதனால் வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்றன.

**ராகவன் வாய்க்காலில் மழை வெள்ளம்: பல ஏக்கர் நெல், உளுந்து பயிர்கள் நாசம்**

திருவெண்ணெய்நல்லூர்:திருவெண்ணெய்நல்லூர் அருகே ராகவன் வாய்க்காலில் ஏற்பட்ட உடைப்பை சரி செய்யாததால், மழை வெள்ளத்தில் பயிர்கள் நாசமானது.

திருக்கோவிலூர் அணைக்கட்டிலிருந்து ராகவன் வாய்க்கால் பிரிந்து, பல்வேறு ஊர்களின் வழியே கடலூர் மாவட்டத் திலுள்ள கெடிலம் ஆற்றில் கலக்கிறது. இந்த வாய்க்கால் மூலம் பல்வேறு கிராம ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுசெல்லப்படுகிறது.கடந்த 23ம் தேதி திருவெண்ணெய்நல்லூர் அடுத்த ஆனைவாரி ரயில்வே கேட் பகுதியிலுள்ள ராகவன் வாய்க்காலில் திடீர் உடைப்பு ஏற்பட்டு, தண்ணீர் பழைய பட்டினம் பகுதியிலுள்ள வயலு<க்கு

சென்றது. இதனால் 40க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த நெல், உளுந்து நீரில் மூழ்கியது.

இதற்கிடையில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்வதால் அணைக்கட்டு தண்ணீர், ஆனைவாரி, ஆத்திப்பட்டு ஏரிகளின் உபரி நீர் மற்றும் வயல்வெளி நீர் இந்த வாய்க் காலில் அதிகமாக கலக்கிறது.

கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக உடைப்பை சரி செய்யாததால் தண்ணீர் விளை நிலங்களுக்கு சென்று பயிர்களை நாசமாக்கி வருகிறது.

பொதுப்பணித்துறை அதிகாரிகள் உடனடியாக ராகவன் வாய்க்காலில் ஏற்பட்டுள்ள உடைப்பை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மழையால் பருத்தி செடிகள் பாதிப்பு**

சின்னசேலம்:சின்னசேலம் பகுதிகளில் பெய்த தொடர் மழையால், பருத்தி அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.சின்னசேலம் தாலுகாவில் உள்ள தகரை, கல்லாநத்தம், வி.மாமாந்தூர், கூகையூர், வீரபயங்கரம் உள் ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில், விவசாயிகள் கிராசிங் பருத்தி பயிர் சாகுபடி செய்துள்ளனர்.

இதில் ஆண் செடி 2 சென்ட்டில் பயிர் செய்தால், பெண் செடி 50 சென்ட்டில் பயிர் செய்ய வேண்டும். தொடர்ந்து மழை பெய்ததால், ஆண் செடிகள் சரிவர பூக்காததால் மகரந்தம், இல்லாமல் கிராசிங் செய்வதற்கு விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர்.

ஏற்கனவே கிராசிங் செய்த பருத்தி காய்கள், வெடிக்காமல் அடைக்காய்களாக மாறிவிடுகிறது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. விவசாயிகள் ஏற்கனவே தனியார் கம்பெனியிடம் முன்பணம் வாங்கிக்கொண்டு பருத்தி பயிர் சாகுபடி செய்துள்ளனர்.

தற்போது பருத்தியை அறுவடை செய்ய முடியாததால், தனியார் கம்பெனியிடம் வாங்கிய பணத்தை திருப்பி செலுத்த முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர்.

வேளாண்துறை அதிகாரிகள் அனைத்து கிராமத்திற்கும் சென்று மழையால் சேதமடைந்த பருத்தி வயல்களை ஆய்வு செய்து, உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**வீடூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு**

விக்கிரவாண்டி: வீடூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்ததால் அணையிலிருந்து 11 ஆயிரத்து 200 கன அடி உபரி நீர் வெளியேற்றப்பட்டது.விக்கிரவாண்டி அருகே உள்ள வீடூர் அணை, கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கன மழையால், நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்து, முழு கொள்ளவான 32 அடியை தொட்டது. கடந்த 23ம் தேதி, அணையிலிருந்து, உபரி நீரை வெளியேற்றினர் .

அணைக்கு தண்ணீர் வரத்து வரக்கூடிய பகுதியான செஞ்சியில் நேற்று முன்தினம் இரவு கன மழை பெய்தது. இதனால் நேற்று காலை அணைக்கு நீர் வரத்து வினாடிக்கு 3 ஆயிரத்து 300 கன அடியாக இருந்த நீர் வரத்து, படிப்படியாக உயர்ந்து 10 ஆயிரத்து 500 கன அடியாக உயர்ந்தது.

அணையின் பாதுகாப்பு கருதி 9 ஷெட்டர்களும் திறக்கப்பட்டு 11 ஆயிரத்து 900 கன அடி நீரை வெளியேற்றினர். அணைக்கு வரத்து வரக் கூடிய மேற்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு கன மழை பெய்ததால், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சண்முகம் தலைமையில் தீவிர கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உதவி செயற்பொறியாளர் கவுதமன், உதவி பொறியாளர்கள் கபிலன் , சாந்தி, செல்வி , பணியாளர்கள் சகாதேவன், முருகன் ஆகியோரும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்

விக்கிரவாண்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜன் தலைமையில் போலீசார் கரையோர கிராமங்களில் உள்ள பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்தும், கரையோர கிராமங்களில் ரோந்து பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர் .

**தொடர்மழையால் சரிந்த மரவள்ளிகுச்சிகள்: 50 ஏக்கர் பாதிப்பால் நிவாரண கோரிக்கை**

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை பகுதியில், தொடர்மழையால் வேர்அழுகி மரவள்ளி குச்சிகள் சாய்ந்ததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தில், நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் மட்டும், 5,000 ஏக்கர் பரப்பில் மரவள்ளி சாகுபடி உள்ளது. கடந்த, 20 நாட்களாக பெய்த தொடர்மழை காரணமாக பள்ளமாக உள்ள வயல்களில் தண்ணீர் தேங்கி நின்றது. தண்ணீர் தேங்கி நின்றதால், அப்பகுதியில் இருந்த மரவள்ளி கிழங்குகள் அழுகியது. வேராக இருக்கும் கிழங்குகள் அழுகியதால், செடிகள் சாய்ந்துவிட்டன. நாமகிரிப்பேட்டை கொங்களம்மன் கோயில் பகுதியில், 50 ஏக்கர் அளவிற்கு இந்த பாதிப்பு உள்ளது. அரியாகவுண்டம்பட்டி விஸ்வநாதன், சேர்மன் தோட்டத்தை சேர்ந்த கோவிந்தன் ஆகியோர் வயல்களில் அதிகளவு சாய்ந்துள்ளன.

இதுகுறித்து விவசாயி கோவிந்தன் கூறியதாவது: தொடர் மழைகாரணமாக, 50 ஏக்கர் பரப்பளவு மரவள்ளி செடிகள் சாய்ந்து விட்டன. பல இடங்களில் அறுவடை செய்யும் தருவாயில் இருந்ததால், கிழங்கை வெட்டி எடுத்துவிட்டனர். ஆனால், 20 ஏக்கர் பரப்பளவில் உள்ள மரவள்ளி கிழங்கு பாதிக்கப்பட்டுள்ளது. விலை குறைந்துள்ளதால், மரவள்ளி விவசாயிகள் ஏற்கனவே மிகவும் கவலையடைந்துள்ளனர். எனவே, பாதிப்படைந்த விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**கறவைமாடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி முகாம்**

நாமக்கல்: வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் மோகன் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 8ம் தேதி, காலை, 9 மணிக்கு, 'கறவைமாடு வளர்ப்பில் லாபம் பெற ஆண்டுக்கு, ஒரு கன்று உற்பத்தி' என்ற தலைப்பில், ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நடக்கிறது. முகாமில், கறவைமாடுகளில் சினைப்பருவ அறிகுறிகள், கனநீர் மாறுபாடுகள், நோய்க் கிருமிகளின் தாக்குதல் மற்றும் தீவன குறைபாடுகளால் ஏற்படும் தற்காலிக மற்றும் நிரந்தர மலட்டுத்தன்மை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், சினைப்பருவ அறிகுறிகளை தெரிந்து கொள்வது, சினைப் பருவத்திற்கு வராத மாடுகளை எப்படி சினைப்பருவத்திற்கு வர

வைப்பது, ஆண்டுக்கு ஒரு கன்றினை பெற்று லாபம் பெறுவதற்கான வழிமுறைகள் பற்றியும் விளக்கப்படுகிறது. அதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள், வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரில் வந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ, வரும், 7ம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**சிறப்பு கால்நடை பாதுகாப்பு முகாம்**

ப.வேலூர்: ப.வேலூர் அடுத்த, வடுகபாளையம்புதூரில், சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடந்தது. முகாமை, சேளூர் ஊராட்சி மன்றத் தலைவர் கோவிந்தசாமி துவக்கி வைத்தார். இதில், வடுகபாளையம்புதூர், சேளூர், செல்லப்பம்பாளையம், சுப்பையம்பாளையம், கந்தம்பாளையம், சாணார்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் இருந்து வந்த கால்நடைகளுக்கு, குடல்புழு நீக்கம், சினை பரிசோதனை, செயற்கைமுறை கருவூட்டல் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. முகாமில், 149 பசுக்கள், 129 எருமைகள், 354 ஆடுகள், 214 கோழிகள், 23 நாய்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கன்றுகளின் பேரணி நடைபெற்றது. இதில், தலா, இரண்டு பசு கன்றுகள், எருமை கன்றுகள் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. முகாமில், வெங்கரை கால்நடை மருந்தக உதவி மருத்துவர் ராஜா, கலைச்செல்வி ஆகியோர் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர்.

**ஏரி, குளங்கள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி**

காரிமங்கலம்: காரிமங்கலம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள பெரும்பாலான ஏரி, குளங்கள் திண்டல் கால்வாய் மூலம் நிரம்பியுள்ளதால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காரிமங்கலம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இப்பகுதியில், கரும்பு, காய்கறிகள், பூக்கள் மற்றும் தென்னை, மா ஆகியவை முக்கிய பயிர்களாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

கடந்த, பல ஆண்டுகளாக, அப்பகுதிகளில் போதிய மழையில்லாததால், பெரும்பாலான ஏரி, குளங்கள் வறண்டு காணப்பட்டன. இதனால், நிலத்தடி நீர் மட்டமும் பாதிக்கப்பட்டது.

புதிய கால்வாய் வசதி: இதை தொடர்ந்து, விவசாயிகளின் நலன் கருதி, கடந்த அ.தி.மு.க., ஆட்சியில், 7.32 கோடி ரூபாய் மதிப்பில், கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணையில் இருந்து திண்டல் ஏரிக்கு உபரிநீர் வர, கால்வாய் அமைக்கப்பட்டது. மேலும், திண்டல் ஏரி மூலம், 20க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு தண்ணீர் செல்ல வழிவகை செய்யப்பட்டது. ஆனாலும், கடந்த சில ஆண்டுகளாக திண்டல் ஏரிக்கு சீரான முறையில் கே.ஆர்.பி., அணையில் இருந்து உபரி நீர் திறக்காததால், திண்டல் ஏரி உட்பட, பல்வேறு ஏரிகள் வறண்டு, விவசாயம் பாதிக்கப்பட்டது.

ஏரிகள் நிரம்பின: இந்நிலையில், தென்பெண்ணை ஆற்றின் நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்த தொடர் மழை காரணமாக, கே.ஆர்.பி., அணையில் இருந்து, திண்டல் ஏரி மற்றும் அதை சார்ந்த ஏரிகளுக்கு, தண்ணீர் திறக்கப்பட்டது. மேலும் பருவமழையாலும் நீர் வரத்து பெற்று, திண்டல் ஏரி, கொள்ளுப்பட்டி ஏரி, பெரிய ஏரி, ராசுகுட்டை ஏரி, வண்ணான் ஏரி, மோட்டுப்பட்டி ஏரி உட்பட, காரிமங்கலம் பகுதியில் உள்ள, 30க்கும் மேற்பட்ட ஏரி மற்றும் குளங்கள் நிரம்பியுள்ளன.

நிலத்தடி நீர்மட்டம் உயர்வு: தற்போது, பொதுமக்கள் மற்றும் விவசாயிகளால் சீரமைக்கப்பட்ட, கால்வாயில் தண்ணீர் தொடர்ச்சியாக, செல்வதை அடுத்து, கடைக்கோடி பகுதியான சிக்கதிம்மனஹள்ளி ஏரி நிரம்பி, கரகப்பட்டி ஏரி நிரம்பும் தருவாயில் உள்ளது. காரிமங்கலம் சுற்று வட்டார பகுதிகளில் பெரும்பாலான ஏரி, குளங்கள் நிரம்பியதால், அப்பகுதியில் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. இதனால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டுகோள்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், தொடர் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என, விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், சாமை, மஞ்சள், மரவள்ளி கிழங்கு, பருத்தி, கொண்டைக்கடலை உள்ளிட்ட பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, அறுவடைக்கு தயராக இருந்த நெல், சாமை உள்ளிட்ட பயிர்கள் நிலத்தில் சாய்ந்து, நெல்மணிகள், சாமை ஆகியவை முளைக்க துவங்கியதால், பல ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்த விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் மஞ்சள் சாகுபடி மழை நீர் தேங்கி நாசமானது.

இதேபோல், மாவட்டத்தில் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மரவள்ளி கிழங்கு, பருத்தி, தக்காளி மற்றும் கொத்தமல்லி பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, மாவட்டத்தில் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு, உரிய நிவாரணம் வழங்க கால தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என, பாதிக்கப்பட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்த கோரிக்கையை வலியுறுத்தி, தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த வாராந்திர மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாவை சேர்ந்த லிங்கநாயக்கஹள்ளி மற்றும் சில்லாரஹள்ளியைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள், மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு, உரிய நிவாரணம் வழங்க, டி.ஆர்.ஓ., சங்கரிடம் மனு கொடுத்தனர்.

**நீலகிரியில் குறைந்தது மக்கள் தொகை; விரிந்தது தேயிலை தோட்டம்!**

கடந்த, 20 ஆண்டுகளில், நீலகிரி மாவட்டத்தில், தேயிலை பயிரிடும் பரப்பு, 41 ஆயிரம் ஏக்கர் அளவுக்கு அதிகரித்துள்ளது. பெரிய நிறுவனங்கள் குறைந்து, சிறுதேயிலை விவசாயிகள் பெருகியுள்ளனர்.2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில், தேசிய அளவில், நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே, மக்கள் தொகை, 3.55 சதவீதம் குறைந்திருந்தது. இயற்கைப் பேரிடர், மனித-வன உயிரின மோதல் அதிகரிப்பு, உயர் கல்விக்கான வாய்ப்பு குறைவு, வேலை வாய்ப்பு குறைவு, பசுந்தேயிலை விலை வீழ்ச்சி போன்ற பல காரணங்களால், இளம் தலைமுறையினர் சமவெளிக்குச்செல்வது அதிகரித்துள்ளது.

அதே நேரத்தில், 20 ஆண்டுகளில், நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பயிரிடும் பரப்பு, பல மடங்கு அதிகரித்திருப்பது, தகவல் அறியும் உரிமைச் சட்டம் வாயிலாக தெரியவந்துள்ளது. இது தொடர்பான தகவல்களை, தேயிலை வாரியத்திடம் வாங்கியதில், பல்வேறு புள்ளி விபரங்கள் கிடைத்துள்ளன. இந்த காலகட்டத்தில், நீலகிரியில், 41 ஆயிரத்து 468 ஏக்கர் பரப்பளவுக்கு, தேயிலை பயிரிடும் பரப்பு அதிகமாகியுள்ளது.

1995ல், நீலகிரி மாவட்டத்தில், 191 தோட்ட நிறுவனங்கள் இருந்துள்ளன. அவை, 49 ஆயிரத்து 306 ஏக்கர் பரப்பில், தேயிலை பயிரிட்டன. அப்போது, சிறுதேயிலை விவசாயிகளின் எண்ணிக்கை, 6,587 ஆக இருந்தது. அவர்களால் தேயிலை பயிரிடப்பட்ட பரப்பு, 18 ஆயிரத்து 634 ஏக்கர் மட்டுமே. ஒட்டு மொத்தமாக, அப்போது, 67 ஆயிரத்து 941 ஏக்கர் பரப்பில், தேயிலை பயிரிடப்பட்டது.

தற்போது, தோட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, 97 ஆக குறைந்துள்ளது. இந்த நிறுவனங்களிடம், 39 ஆயிரத்து 861 ஏக்கர் தேயிலைத் தோட்டங்கள் உள்ளன.

இதற்கு நேர் மாறாக, சிறுதேயிலை விவசாயிகளின் எண்ணிக்கை, 6,587 லிருந்து, 39 ஆயிரத்து 47 ஆக உயர்ந்துள்ளது. இவர்களால், 69 ஆயிரத்து 547 ஏக்கர் பரப்பில், தேயிலை பயிரிடப்படுகிறது. மொத்தமாக, ஒரு லட்சத்து, 9,400 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடப்படுகிறது.

தென் மாநில அளவில், தேயிலை உற்பத்தியில் தமிழகமே முதலிடம் வகிக்கிறது. தமிழகத்தில், 140 தோட்ட நிறுவனங்கள், 39 ஆயிரத்து 51 சிறு தேயிலை விவசாயிகளால், ஒரு லட்சத்து, 42 ஆயிரத்து 722 ஏக்கர் பரப்பளவில் தேயிலை விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. கேரளாவில், 91 தோட்ட நிறுவனங்கள் மற்றும் 6,175 சிறு தேயிலை விவசாயிகளால், 84 ஆயிரத்து 58 ஏக்கர் பரப்பில், தேயிலை பயிரிடப்படுகிறது.கர்நாடகாவில், 18 தோட்ட நிறுவனங்கள் மட்டுமே, 5,493 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடுகின்றன. 20

ஆண்டுகளில், தென் மாநில அளவில் தோட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை, 425 லிருந்து 249 ஆக குறைந்துள்ளது.

சிறுதேயிலை விவசாயிகள் எண்ணிக்கை, 10 ஆயிரத்து 568 லிருந்து, 45 ஆயிரத்து 226 ஆக உயர்ந்துள்ளது.1995 ல், ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 607 ஏக்கர் பரப்பில் நடந்த தேயிலை விவசாயம், தற்போது, 2 லட்சத்து 32 ஆயிரத்து 275 ஏக்கர் அளவுக்கு பெருகியுள்ளது. பல்வேறு பெயர்களில் இருந்த தோட்ட நிறுவனங்கள், ஒரே பெயரில் இணைந்ததும், அவற்றின் எண்ணிக்கை குறையக் காரணமாகவுள்ளது. சிறு தோட்ட நிறுவனங்கள், பல பெயர்களில் சிறு தேயிலை விவசாயிகளாக, பதிவு செய்திருப்பது, மற்றுமோர் முக்கியக்காரணம்.

**டெல்டா மாவட்டங்களில் தொடர் மழை: பயிர்கள் அழுகும் நிலையில் உள்ளதால் விவசாயிகள் கவலை**

தஞ்சாவூர்: டெல்டா மாவட்டங்களில், பெய்து வரும் தொடர் மழையால், சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்கள் அழுகும் நிலையில் உள்ளதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில், டெல்டா மாவட்டங்களான, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களில் கடந்த, இரண்டு நாட்களாக பலத்த மீண்டும் மழை பெய்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு வாரத்துக்கு முன்பு பெய்த பலத்த மழையால், 532 ஹெக்டேரில் சம்பா, தாளடி பருவ நெல் பயிர் நீரில் மூழ்கின. இவற்றில், 196 ஹெக்டேரில் தண்ணீர் வடியாமல் இருந்ததால் பயிர்கள் தொடர்ந்து மூழ்கியே இருந்தன. இந்நிலையில், நேற்றுமுன்தினம் முதல் தொடர்ந்து பெய்த பலத்த மழையால், ஏற்கெனவே தண்ணீரில் மூழ்கியிருந்த பயிர்களையும் சேர்த்து மொத்தம், 205 ஹெக்டேரில் சம்பா, தாளடி பருவ நெல் பயிர்கள் நீரில் மூழ்கின. அதிகபட்சமாக திருவையாறில், 80 ஹெக்டேரிலும், ஒரத்தநாட்டில், 46 ஹெக்டேரிலும், பூதலூரில், 35 ஹெக்டேரிலும், கும்பகோணத்தில், 15 ஹெக்டேரிலும், திருவிடைமருதூரில், 13.2 ஹெக்டேரிலும், பட்டுக்கோட்டையில், 7.2 ஹெக்டேர் உள்ளிட்ட நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. திருவாரூர் மாவட்டத்தில் மன்னார்குடி, திருத்துறைபூண்டி

மற்றும் முத்துப்பேட்டை பகுதிகளில், 250 ஏக்கரிலும், நாகை மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம் ஆகிய பகுதிகளில், 200 ஏக்கரிலும் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. தொடர் மழையால் தற்போது வயலில் இருக்கும் தண்ணீரை வெளியேற்றுவதில் சிக்கல் இருக்கும் நிலையில், பயிர்கள் அழுகும் தன்மை எட்டியுள்ளதாக விவசாயிகள் வேதனையுடன் கூறினர்.

163 கால்நடைகள் இறப்பு: தஞ்சாவூர் மாவட்டத்தில், பலத்த மழையால், இதுவரை, 109 ஆடுகளும், 54 பசு மாடுகளும் இறந்துள்ளன. இதுவரை, 623 வீடுகள் பகுதியாகவும், 46 வீடுகள் முழுமையாகவும் இடிந்து சேதமாகியுள்ளன.

**கம்பம் பகுதியில் வாழை சாகுபடி பரப்பு குறைந்தது**

கம்பம்:கம்பம் பகுதியில் வாழை சாகுபடி செய்யும் பரப்பளவு குறைந்துள்ளது. இந்த ரகம் சாகுபடி செய்த விவசாயிகள் மாற்றுப்பயிர்களை பயிரிடுவதில் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக வாழைக்கு நல்ல விலை கிடைத்து வந்தது.

இதனால் விவசாயிகள் செவ்வாழை, நாழிப்பூவன், ஜி 9 பச்சை, நேந்திரன் உள்ளிட்ட பல்வேறு ரகங்களை சாகுபடி செய்ய துவங்கினர். அவற்றில் நல்ல மகசூலும், அதிக விலையும் கிடைத்து வந்ததால் மகிழ்ச்சியில் இருந்தனர்.

இந்நிலையில், கடந்த 7 மாதங்களாக வாழை விலை கடும் வீழ்ச்சி அடைந்து வருகிறது. இதனால் வாழை சாகுபடி செய்யும் பரப்பளவும் படிப்படியாக குறையத் துவங்கியுள்ளது. கம்பம் பகுதியில் கூடலூர், கம்பம், காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி, சாமாண்டிபுரம் உள்ளிட்ட கிராமங்களில் 750 எக்டர் வரை சாகுபடி செய்யப்பட்ட வாழை படிப்டியாக குறைந்து 300 எக்டராகி விட்டது. இந்த ஆண்டு புதிதாக வாழை சாகுபடி செய்யும் பரப்பளவு 150 எக்டராக குறைந்துள்ளது. இது தொடர்பாக விவசாயிகளிடம் கேட்டபோது, ""ஒரு கிலோ வாழைக்கு 6 ரூபாய் விலை கிடைக்கிறது. ஒரு தாருக்கு ரூ.180 கிடைக்கிறது. ஆனால் சாகுபடி செலவு ஒரு தாருக்கு ரூ. 150 வரை ஆகிறது. எனவே, வாழை சாகுபடியில் திருப்தியில்லாத விலை கிடைப்பதால் சாகுபடி செய்வதில் ஆர்வம் குறைந்து விட்டது,' என்கின்றனர்.

**நாகையில் விடிய விடிய பலத்த மழை; தரைப்பாலங்கள் உடைந்தன சம்பா பயிர்கள் மூழ்கியதால் விவசாயிகள் கவலை**



நாகப்பட்டினம்

நாகையில் விடிய விடிய பெய்த பலத்த மழையால் தரைப்பாலங்கள் உடைந்தன. மேலும் சம்பா பயிர்கள் மூழ்கியதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் கடந்த அக்டோபர் மாதம் இறுதியில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது. இதைத்தொடர்ந்து தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. நாகையில் வடகிழக்கு பருவமழை தொடங்கியதில் இருந்து அவ்வப்போது கனமழை பெய்து வந்தது. இந்நிலையில் தற்போது வங்க கடலில் அந்தமான் அருகே தென்கிழக்கு பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு நோக்கி நகர்ந்து தென்மேற்கு வங்க கடலில் நிலை கொண்டுள்ளதால்

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் மேலும் 4 நாட்களுக்கு மழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதன்படி நாகையில் கடந்த 3 நாட்களாக விட்டு விட்டு பலத்த மழை பெய்து வருகிறது. ஏற்கனவே பெய்த மழையால் நாகை பகுதியில் நிரம்பி இருந்த நீர்நிலைகள், தற்போது பெய்துவரும் மழையால் கரைகளை உடைத்து கொண்டு ஓடும் நிலை ஏற்பட்டுள்ளது. தரைப்பாலம் உடைந்தது மேலும், சில இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன. செல்லூர் - சங்கமங்கலம் செல்லும் சாலையில் ஆங்காங்கே போடப்பட்டுள்ள தரைப்பாலங்கள் உடைந்து முற்றிலும் சாலை பெயர்ந்து போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது. நேற்று காலை மழை நின்றது. இதனால் நாகையில் நேற்று பள்ளிகள் வழக்கம் போல் இயங்கின. ஆனால் சற்று நேரத்தில் மீண்டும் லேசான சாரல் மழை பெய்ய தொடங்கியது. பின்னர் மதியம் 1 மணியளவில் மீண்டும் பலத்த மழை பெய்தது. இந்த மழை நீண்ட நேரம் நீடித்தது. இதனால் காலையில் பள்ளிக்கு சென்ற குழந்தைகள் மதிய உணவுக்கு மழையில் நனைந்தபடியே வீட்டுக்கு சென்று வந்தனர். இந்த மழையால் நேற்று சாலைகளில் மழைநீர் ஆறுபோல் ஓடியது. மழை அளவு நாகையில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக அந்த பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா பயிர்கள் மீண்டும் நீரில் மூழ்கியுள்ளன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மீனவர்கள் வழக்கம்போல் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். மேலும், நாகை கீச்சாங்குப்பத்தில் உள்ள கருவாடு காயவைக்கும் தளம் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. மழை காரணமாக தலைஞாயிறு முதல் சேத்தியை சேர்ந்த சுப்பிரமணியன் (வயது57) என்பவரது ஓட்டு வீடு இடிந்து விழுந்தது. இதில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இதுகுறித்து தகவல் அறிந்த வருவாய் துறையினர் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்தினர். நாகை மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணி நிலவரப்படி அதிகபட்சமாக கொள்ளிடத்தில் 96 மி.மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக 7.20 மி.மீட்டர் மழையும் பதிவானது. மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு (மி.மீட்டரில்) வருமாறு:- தரங்கம்பாடி 83, சீர்காழி 77.5, மணல்மேடு 66.40, மயிலாடுதுறை 66, தலைஞாயிறு 52.6, திருப்பூண்டி 43.4, நாகை 16.1 ஆகும். நாகை மாவட்டத்தில் மொத்தம் 508.2

மி.மீட்டர் மழையும், சராசரியாக 56.47 மி.மீட்டர் மழையும் பெய்துள்ளது. முதியவர் சாவு நாகை பாப்பாகோவிலை அடுத்த கருவேலி தெற்கு தெருவை சேர்ந்தவர் அருணாசலம் (60). நாகை பகுதியில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கன மழை காரணமாக குளிர் தாங்கமுடியாமல் உடல் நிலை பாதிக்கப்பட்டு இருந்து வந்துள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் மேலும் குளிர் அதிகமாக இருந்ததால் அதை தாங்கமுடியாமல் அருணாசலம் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்த தகவலின்பேரில் நாகை டவுன் போலீசார் சம்பவஇடத்திற்கு சென்று பிணத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக நாகை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**நிலவேம்பு கசாயம் வழங்கும் முகாம்**



நெல்லை

நெல்லை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பொதுமக்களுக்கு நிலவேம்ப கசாயம் வழங்கப்பட்டது. நிலவேம்பு கசாயம் கோபாலசமுத்திரம் பண்ணை வெங்கட் ராமய்யர் உயர்நிலைப்பள்ளியும், நெல்லை அரசு சித்த மருத்துவ கல்லூரியும் இணைந்து சிறப்பு மருத்துவ முகாமை நடத்தியது. பள்ளி வளாகத்தில் நடந்த இந்த முகாமில் ஆசிரியர்கள், அலுவலர்கள்,

மாணவர்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது. தலைமை ஆசிரியை ரேவதி லட்சுமி வரவேற்றுப் பேசினார். கல்லூரி முதல்வர் சவுந்திர ராசன் தலைமை தாங்கி, நிலவேம்பு கசாயத்தின் பயன் பற்றியும், டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்கும் முறை பற்றியும் விளக்கி பேசினார். ஆசிரியர் ராமலிங்கம் நன்றி கூறினார். இதே போல் நெல்லை சிந்துபூந்துறையை அடுத்த மேகலிங்கபுரத்தில் நடந்த முகாமில், சித்த மருத்துவ கல்லூரி டாக்டர் நெடுஞ்செழியன் உத்தரவுப்படி 700 பேருக்கு நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது.

செங்கோட்டை-கடையம்

செங்கோட்டை யூனியன் அலுவலக வளாகத்தில் நிலவேம்பு கசாயம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. யூனியன் தலைவர் முருகையா தலைமை தாங்கி நிலவேம்பு கசாயத்தை பணியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் வழங்கினார். துணைத்தலைவர் ஆதிபாலசுப்பிரமணியன், ஆணையாளர் சிவகாமசுந்தரி, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மாணிக்கத்தாய், செங்கோட்டை அரசு மருத்துவமனை சித்த மருத்துவர் கலா மற்றும் கவுன்சிலர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

அதேபோல் செங்கோட்டையில் உள்ள நூலகத்தில் வாசகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது. வாசகர் வட்ட இணைச்செயலாளர் செண்பககுற்றாலம், விழுதுகள் அறக்கட்டளை நிறுவனர் கற்குடி சேகர், நூலகர் ராமராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டனர். கடையம் யூனியன் ரவணசமுத்திரம் பஞ்சாயத்து, நியூஹேண்ட்ஸ் அறக்கட்டளையுடன் இணைந்து ரவணசமுத்திரம், வீராசமுத்திரம், மாலிக்நகர், திருமலையப்பபுரம், மந்தியூர், பிள்ளைகுளம் பகுதி மக்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கும் முகாமை நடத்தியது. பஞ்சாயத்து தலைவர் மீரா சாகிப் தலைமை தாங்கினார். துணை தலைவர் வள்ளிநாயகம் வரவேற்றார். யூனியன் கவுன்சிலர் கணேசன் முன்னிலை வகித்தார். இந்திய கப்பல் துறை ஆலோசகர் அமீர்கான், திரைப்பட இயக்குனர் இந்தியன், டாக்டர் பழனிகுமார் ஆகியோர் பொதுமக்களுக்கு நிலவேம்பு கசாயத்தை வழங்கினர். பஞ்சாயத்து செயலாளர் மாரியப்பன் மற்றும் கவுன்சிலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

பனவடலிசத்திரம்-சங்கரன்கோவில்

பனவடலிசத்திரம் அருகே மேலஇலந்தக்குளம் அ.தி.மு.க., கிளைக்கழகமும், சுஸ்லான் பவுன்டேசன் ஏ.ஐ.ஆர்.டி., தொண்டு நிறுவனம் சார்பில் நிலவேம்பு கசாயம் வழங்கும் முகாம் நடந்தது. மாவட்ட பஞ்சாயத்து துணைத்தலைவர் தர்மராஜ் தலைமை தாங்கினார். டாக்டர் சரவணன் முன்னிலை வகித்தார். ஒன்றிய இளைஞர் பாசறை துணைச் செயலாளர் செந்தில்குமார் வரவேற்றார். மேலஇலந்தக்குளம் பஞ்சாயத்து தலைவர் மாரிமுத்து, ஒன்றிய கவுன்சிலர் நடராஜன், கிளைச்செயலாளர் நூற்றாண்டு ஆபிரகாம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சங்கரன்கோவில் தாலுகா குருவிகுளம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிலவேம்பு கசாயம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. முத்துச்செல்வி எம்.எல்.ஏ., தலைமை தாங்கினார். குருவிகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் சுப்பையா பாண்டியன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் பொது மக்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டது. அரசு சித்த மருத்துவ அலுவலர் மாணிக்கத்தாய், குருவிகுளம் சித்த மருத்துவர் செல்வராணி, அரசு மருத்துவர்கள் குருபாலா, பாலவிக்னேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## திருவாரூர் மாவட்டத்தில் 3-வது நாளாக பலத்த மழை குடவாசலில் 56 மி.மீட்டர் பதிவானது



திருவாரூர் மாவட்டத்தில் தொடர்ந்து 3-வது நாளாக நேற்று பலத்த மழை பெய்தது. நேற்று அதிகபட்சமாக குடவாசலில் 56 மில்லி மீட்டர் மழை

பதிவானது. பலத்த மழை தமிழகத்தில் கடந்த அக்டோபர் மாதம் 28-ந் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கியது. திருவாரூர் மாவட்டத்தில் தொடக்கத்தில் மிதமான அளவு பெய்து வந்த பருவமழை நவம்பர் 14-ந் தேதிக்கு பிறகு தீவிரமாக பெய்து வருகிறது. இடையில் ஒரு சில நாட்கள் வெயில் அடித்தது. இந்த நிலையில் வங்க கடல் பகுதியில் கடந்த 4 நாட்களுக்குள் அடுத்தடுத்து 2 குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியதால், திருவாரூர் மாவட்டத்தில் தொடர்ந்து 3-வது நாளாக நேற்று மழை பெய்தது. மாணவ-மாணவிகள் அவதி கடந்த ஞாயிற்றுக்கிழமை வங்க கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவானதால் வானிலை ஆய்வு மையம் பலத்த மழை பெய்யும் என எச்சரிக்கை விடுத்தது. இதையடுத்து திருவாரூர் மாவட்ட பள்ளி, கல்லூரிகளுக்கு திங்கட்கிழமை விடுமுறை விடப்பட்டது. ஆனால் திங்கட்கிழமை மழை விட்டு, விட்டு மிதமான அளவிலேயே பெய்தது. இதனால் நேற்று பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்படவில்லை. இந்த நிலையில் நேற்று காலை 11 மணி அளவில் லேசாக பெய்ய தொடங்கிய மழை பிற்பகலில் வெளுத்து வாங்கியது. இதனால் நேற்று பள்ளி, கல்லூரி மாணவர்கள் மழையில் நனைந்து அவதிப்பட்டனர்.

முன்னதாக திங்கட்கிழமை மாலையில் திருவாரூர், முத்துப்பேட்டை, குடவாசல் உள்ளிட்ட இடங்களில் சுமார் 2 மணிநேரம் பலத்த மழை பெய்தது. அதன் பிறகு இரவு முழுவதும் தூறி கொண்டிருந்தது. இந்த மழை அதிகாலை வரை நீடித்தது. அதன்பிறகு நேற்று காலை 11 மணி வரை மழை இல்லை. கோவிலில் மழைவெள்ளம் தொடர்ந்து 3 நாட்கள் மழை பெய்ததால் திருவாரூர் புதுத்தெருவில் உள்ள கருணாகரேஸ்வரர் கோவிலில் மழை வெள்ளம் குளம்போல் தேங்கி நின்றது. பிரகாரத்தை சுற்றி வெள்ளம் தேங்கி நின்றதால் பக்தர்கள் சிரமப்பட்டனர். கோவில் அமைந்துள்ள கட்டிடம் பழமையானது என்பதால் மழை வெள்ளம் கோவிலில் தேங்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

திருவாரூர் மாவட்டத்தில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் குடவாசலில் அதிகபட்சமாக 56 மில்லி மீட்டர் மழை பெய்தது. மாவட்டத்தின் மற்ற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீட்டர்

அளவுகளில்) வருமாறு:- நன்னிலம்-50, திருத்துறைப்பூண்டி-30, முத்துப்பேட்டை-25, வலங்கைமான்-25, திருவாரூர்-23, பாண்டவையாறு தலைப்பு-20, நீடாமங்கலம்-18, மன்னார்குடி-15. நேற்று பதிவான மொத்த மழை அளவு 262 மி.மீட்டர் ஆகும். மாவட்டத்தில் சராசரியாக பெய்த மழையின் அளவு 29 மி.மீட்டர் ஆகும்.

**திருவள்ளூர் மாவட்டத்தில் பலத்த மழை**



பெரியபாளையம்,

திருவள்ளூர் மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது.

பலத்த மழை

திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர், பேரம்பாக்கம், காக்களூர், திருவாலங்காடு மற்றும் சுற்று வட்டாரத்தில் பலத்த மழை பெய்தது. திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியம் குமரப்பேட்டைக்கும் ஆரணிக்கும் இடையே மங்களம் கிராம சாலை வழியாக ஆரணி ஆற்றில் இருந்து வெள்ளம் பெருக்கெடுத்து சாலையில் ஓடுகிறது.

இதனால், ஆரணி–பெரியபாளையம் நெடுஞ்சாலையில் இடுப்பளவு தண்ணீர் ஓடியதால் வாகனங்கள் அதில் நீந்திச்சென்றது. பின்னர் படிப்படியாக தண்ணீரின் வேகம் அதிகரித்ததால் போலீசார் வாகன போக்குவரத்துக்கு தடைவிதித்தனர்.

கன்னிகைப்பேர்

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியம் கன்னிகைபேர் ஏரி முழுவதும் நிரம்பியதால் உபரி நீர் மதகு வழியாக வெளியேறுவதால் பெரியபாளையம்–சென்னை நெடுஞ்சாலையில் மதுரவாசல் அருகே சாலையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் அந்த வழிதடத்தில் போக்குவரத்துக்கு போலீசார் தடை விதித்தனர்.

மேலும், கன்னிகைபேர் அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் முழங்கால் அளவு தண்ணீர் ஓடுகிறது. கன்னிகைபேர் மற்றும் ஆரணி வழிதடத்தில் போக்குவரத்து தடைப்பட்டதால் பெரியபாளையத்துக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏரி உடைப்பு

எல்லாபுரம் ஒன்றியம் பனையஞ்சேரி ஊராட்சியில் உள்ள சுமார் 550 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஏரியில் உடைப்பு ஏற்பட்டது. இதனால் அதில் இருந்த தண்ணீர் வெளியேறி பனையஞ்சேரி பெரிய காலனி,சின்ன காலனி, வன்னியர் தெரு உள்ளிட்ட பல பகுதியில் உள்ள 300–க்கும் மேற்பட்ட வீடுகளில் புகுந்தது.

இடுப்பளவு தண்ணீரில் அவதிப்பட்ட பொதுமக்களை ஊராட்சிமன்ற தலைவர் மார்கண்டன் மற்றும் வருவாய்துறையினர் மீட்டு இங்குள்ள பள்ளி கட்டிடம், கிராம ஊராட்சி சேவை மைய கட்டிடங்களில் தங்க வைத்துள்ளனர்.

மழை வெள்ளத்தால் பழவேற்காடு பகுதியில் உள்ள நடுவூர்மாதாகுப்பம், கரிமணல், ஜமிலாபத், செஞ்சியம்மன்நகர், கோட்டைக்குப்பம், எடமணி, கோரைக்குப்பம் உட்பட தாழ்வான பகுதிகளில் மழைவெள்ளம் தேங்கியுள்ளது. கடலும் ஏரியும் கலக்குமிடமான முகத்துவாரம் வழியாக தண்ணீர் சென்றுக்கொண்டிருக்கிறது. கொசஸ்தலை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் அத்திப்பட்டுபுதுநகரை தண்ணீர் சூழ்ந்துள்ளது.

ஊத்துக்கோட்டை

ஊத்துக்கோட்டையில் நேற்று முன் தினம் இரவு முதல் பலத்த மழை பெய்து வருகிறது. மழைநீருடன் கழிவுநீரும் கலந்து வருவதால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர்.

**காங்கயம் உழவர் சந்தையில் கடந்த மாதம் ரூ.59 லட்சத்திற்கு காய்கறிகள் விற்பனை**



காங்கயம்

காங்கயம் பஸ் நிலையம் அருகே உள்ள சந்தைபேட்டை வளாகத்தில் உழவர் சந்தை செயல்பட்டு வருகிறது. இந்த சந்தைக்கு காங்கயம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் தங்களின் தோட்டங்களில் விளைந்த காய்கறிகள், கீரை வகைகளை கொண்டு வந்து விற்பனை செய்வது வழக்கம்.

உழவர் சந்தையில் கடந்த மாதம்(நவம்பர்) 1 லட்சத்து 80 ஆயிரத்து 808 கிலோ காய்கறிகள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. இதன் மொத்த மதிப்பு ரூ.59 லட்சத்து 6 ஆயிரத்து 235 ஆகும். மேலும் உழவர் சந்தையில் நேற்று விற்கப்பட்ட காய்கறிகளின் விலைகள் விவரங்கள் பின்வருமாறு:– (கிலோவில்) தக்காளி ரூ.45–க்கும், கத்தரி ரூ.80–க்கும், வெண்டை ரூ.40–க்கும், பச்சை மிளகாய் ரூ.25–க்கும், சின்னவெங்காயம் ரூ.50–க்கும், பெரியவெங்காயம் ரூ.45–க்கும் விற்பனையானது.

**மழை வெள்ளத்தால் பாதிப்பு விவசாய கடன்களை உடனே தள்ளுபடி செய்ய வேண்டும் எஸ்.டி.பி.ஐ. கட்சி தலைவர் பேட்டி**



மதுரை

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழக விவசாயிகள் வாங்கிய கடன்களை உடனே தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில தலைவர் பேட்டி அளித்தார்.

வாகன பிரசாரம்

தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும். நீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டும். முஸ்லிம்களின் இடஒதுக்கீட்டை 7 சதவீதமாக உயர்த்தவேண்டும். இலங்கை தமிழர்கள் பிரச்சினைகளுக்கு காரணமாக விளங்கும் கச்சத்தீவை மீட்க வேண்டும். மக்கள் விரோத நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆப் இந்தியா(எஸ்.டி.பி.ஐ) கட்சி சார்பில் மக்களை சந்திப்போம் என்ற வாகன பிரசார பயணத்தை குமரி முதல் சென்னை வரை நடத்தி வருகிறது.

அதன்படி கடந்த 28–ந் தேதி கன்னியாகுமரியில் தொடங்கிய இந்த பயணம் நேற்று காலை மதுரை வந்தது. அவர்களுக்கு கட்சியின் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்த பயணம் மேலூர், ஒத்தக்கடை, உத்தங்குடி, மாட்டுத்தாவணி, அண்ணாநகர், தெப்பக்குளம், முனிச்சாலை, கீழவெளிவீதி,

நெல்பேட்டை, தெற்குவாசல், ஜெய்ஹிந்துபுரம், ஜீவாநகர், பழங்காநத்தம், மஹபூப்பாளையம், செல்லூர் வழியாக கோரிப்பாளையம் சென்றடைந்தது.

கடன்கள் தள்ளுபடி

இந்த பிரசார பயணம் குறித்து கட்சியின் தமிழ் மாநில தலைவர் தெஹ்லான்பாகவி நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:– தமிழகத்தில் பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும். மதுவினால் இளைஞர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். தமிழக, இலங்கை மீனவர்களுக்கு இடையேயான பிரச்சினைக்கு கச்சத்தீவை நாம் இலங்கைக்கு விட்டுக்கொடுத்தது தான். எனவே கச்சத்தீவை மீட்டு எடுத்தால் இந்த பிரச்சினை ஏற்படாது.

கடந்த தேர்தலின் போது முஸ்லீம்களுக்கு இடஒதுக்கீடு 7 சதவீதமாக உயர்த்தப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை அதனை நிறைவேற்றவில்லை. கடந்த 1½ ஆண்டுகளாக மத்தியில் ஆளும் மோடி அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். எனவே தான் மத்திய அரசின் விருதுகளை திரும்பி கொடுக்கும் நிலை ஏற்பட்டு உள்ளது.

மழைவெள்ளதால் பாதிப்பு தமிழகம் முழுவதும் ஏற்பட்டுள்ளதால் அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். குறிப்பாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால், அவர்கள் வாங்கிய விவசாய கடன்களை உடனே மத்திய, மாநில அரசுகள் தள்ளுபடி செய்ய வேண்டும். மதுரை மாநகராட்சியில் சீர்கேடுகள் அதிகாரித்து உள்ளது. இங்குள்ள சாலைகள் குண்டும், குழியுமாக உள்ளது. மேலும் மாநகராட்சி நிர்வாகத்தில் உள்ள சீர்கேடுகளை உடனே கலைய வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதில் மதுரை மாவட்ட தலைவர் முஜிபுர்ரகுமான், மாவட்ட செயலாளர் கமால்பாஷா, ஜாபர்சுல்தான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஆஸ்திரேலியாவில் இருந்து 3.76 லட்சம் டன் கோதுமை இறக்குமதி; மத்திய அரசு மக்களவையில் தகவல்**



புதுடெல்லி,

கடந்த ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான காலகட்டத்தில் இந்தியா 3.76 லட்சம் டன் கோதுமையை ஆஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்திருப்பதாக மக்களவையில் உணவுத்துறை மந்திரி ராம் விலாஸ் பஸ்வான் தெரிவித்துள்ளார். சர்வதேச அளவில் விலை குறைவாக இருப்பதால் வியாபாரிகள் மற்றும் மில் உரிமையாளர்கள் இவ்வாறு கோதுமையை இறக்குமதி செய்துள்ளதாக அவர் தெரிவித்தார். எனினும், அரசு தரப்பில் ஆஸ்திரேலியா, பிரான்ஸ், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளில் இருந்து கோதுமையை இறக்குமதி செய்ய எவ்வித திட்டமும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகிலேயே கோதுமை உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இருப்பது இந்தியா என்பது நினைவு கூரத்தக்கது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**முல்லை பெரியாறு அணை நீர்மட்டம் 140 அடியை எட்டியது.**

முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் 140 அடியை எட்டியதையடுத்து தமிழக அதிகாரிகள் அணையில் முகாமிட்டுள்ளனர்.

முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்துவரும் பருவ மழையை தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக அணையில் நீர்மட்டம் 136 அடிக்கு மேல் உயர்ந்துள்ளது. செவ்வாய்க்கிழமை மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 139.80 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 2,555 அடியாகவும், அணையிலிருந்து, பாசனத்திற்கும், குடிநீருக்கும் வினாடிக்கு 511 கன அடி தண்ணீர் வீதம் திறந்து விடப்படுகிறது. அணையில் மொத்தம் நீர் இருப்பு வினாடிக்கு 7,000 மில்லியன் கன அடியாக உள்ளது.

இதனால், வியாழக்கிழமை அதிகாலை அணையின் நீர்மட்டம் 140 அடியாக எட்டும் நிலை இருப்பதால், தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் வல்லக்கடவு முதல் இடுக்கி அணை வரை உள்ள கேரள மக்களுக்கு முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுவதற்காக அணையிலும்,தேக்கடியிலும் தமிழக அதிகாரிகள் முகாமிட்டுள்ளனர்.

வைகை அணை: இதேபோல், வைகை அணை நீர்மட்டம் 66.47 அடியாகவும், அணைக்கு பெரியாறு, மூலவைகை, கொட்டக்குடி ஆகியவற்றிலிருந்து நீர்வரத்து வினாடிக்கு 2,266 கன அடியாகவும் உள்ளது. அணையிலிருந்து மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை பாசனத்திற்கும், குடிநீருக்கும் வினாடிக்கு 3,660 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது. அணையில் மொத்த நீர் இருப்பு 4,962 மில்லியன் கன அடியாகவும் உள்ளது.

**நிலக்கடலையில் பூச்சி தாக்குதல்: வேளாண் துறை அலுவலர்கள் ஆய்வு**

திருப்புவனம் அருகே ஓடாத்தூர் பகுதியைச் சேர்ந்த விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள மானாவாரி நிலக்கடலையில் அறுவடை நேரத்தில் பூச்சி தாக்குதலால் ஏற்பட்ட சேதம் குறித்து மாவட்ட வேளாண்மை அலுவலர்கள் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தனர்.

ஓடாத்தூரைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் சுமார் 50 ஏக்கர் நிலத்தில் மானாவாரி நிலக்கடலையை கடந்த ஆடி மாதம் பெய்த மழை நீரை பயன்படுத்தி விதைத்தனர்.

இந்நிலையில் விளைச்சல் ஏற்பட்டு கார்த்திகை மாதம் அறுவடைப் பணியை தொடங்கும் முன்னர் நிலக்கடலைச் செடியில் பூச்சி தாக்குதல் ஏற்பட்டது. இதனால் ஏக்கருக்கு 15 மூட்டைக்கு மேல் வர வேண்டிய கடலை 2 மூட்டை மட்டுமே வந்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து உரிய பலனை பெற முடியாமல் விவசாயிகள் மன வேதனையில் இருப்பதாக நவம்பர் 30ஆம் தேதி தினமணி நாளிதழில் செய்தி வெளியானது.

இதுகுறித்து சிவகங்கை மாவட்ட ஆட்சியர் எஸ்.மலர்விழி உத்தரவின்பேரில் மாநில வேளாண் துணை இயக்குநர் மணிவண்ணன், சிவகங்கை மாவட்ட வேளாண் உதவி இயக்குநர் கதிரேசன்(தரக்கட்டுப்பாடு),வேளாண் அலுவலர் கருணாநிதி, திருப்புவனம் வேளாண் உதவி இயக்குநர் சுரேஷ்பாபு, துணை வேளாண் அலுவலர் மனோகரன், உதவி வேளாண் அலுவலர் ஈஸ்வரன் ஆகியோர் பாதிக்கப்பட்ட வயல்வெளியை செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தனர்.

ஆய்வுக்குப் பின்னர் நிலக்கடலையில் அவ்வபோது ஏற்படும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகள் கோடைக் காலத்தில் உழவு செய்தால் ரோமப்புழுவின் கூட்டுப்புழுக்களை அழிக்க முடியும்.

3:4 என்ற விகிதத்தில் விளக்குப் பொறி வைத்து அந்துப் பூச்சிகளை அழிக்கலாம். பயிரிட்டுள்ள கடலையின் ஊடுபயிராக துவரை மற்றும் தட்டைப்பயிறுகளை விதைத்தால் இளம் புழுக்களை அழிக்கலாம். மீண்டும் அறுவடை நேரத்தில் ஹெக்டேர் பரப்பளவிற்கு 375 லிட்டர் தண்ணீரில் பாசோலான் 35 இசி எனும் மருந்தை 750 மி.லி. கலந்து கடலைச் செடியில் தெளித்தல் வேண்டும்.

மேலும்,தண்ணீரில் டைகுளோரோவாஸ் 76இசி எனும் மருந்தை 627மி.லி. அளவு கலந்து தெளித்தல் வேண்டும் என்றனர்.

**புவி வெப்பமயமாவதைத் தடுக்க அதிகளவில் மரக்கன்றுகளை நடுங்கள்: விஞ்ஞானி அறிவுரை**

புவி வெப்பமயமாதலைத் தடுக்க அதிக அளவில் மரக்கன்றுகளை நட்டு வளர்க்க வேண்டும் என, கூடங்குளம் விஞ்ஞானி வி. மாரியப்பன் வலியுறுத்தினார்.

மத்திய அரசின் மனிதவளத் துறை நிதி உதவியுடன், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை சார்பில், சிவகாசி மெப்கோ சிலங் பொறியியல் கல்லூரியில் நவம்பர் 30 முதல் டிசம்பர் 4 ஆம் தேதி வரை அறிவியல் முகாம் நடைபெறுகிறது.

இதில், விருதுநகர், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 52 பள்ளிகளைச் சேர்ந்த 201 மாணவ, மாணவியர் கலந்துகொண்டனர். இந்த அறிவியல் முகாமை, திங்கள்கிழமை தொடக்கி வைத்து விஞ்ஞானி வி. மாரியப்பன் பேசியதாவது: இந்தியாவில் 1000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முதல் அணு உலை கூடங்குளமாகும். இதன்மூலம், தமிழகம் மற்றும் அண்டை மாநிலங்களின் மின்தேவையைப் பூர்த்தி செய்ய இயலும்.

பருவநிலை மாற்றம் தற்போது ஒரு பெரிய சவாலாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம், கார்பன் டை ஆக்சைடு (சிஓ2) அளவுக்கு அதிகமாக காற்றில் கலந்து, சூரிய ஒளியை முழுமையாக பூமிக்கு கொண்டுவர தடையாக இருப்பதால், பூமி வெப்பமடைகிறது.

கடந்த 1910 ஆம் ஆண்டு பூமியின் வெப்பநிலை 16.75 டிகிரி செல்சியஸாக இருந்தது. ஓராண்டுக்கு இரு சதவீதம் பூமியின் வெப்பநிலை கூடிக்கொண்டே சென்று தற்போது, 30.6 டிகிரி செல்சியஸாக உள்ளது.

பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் பனிமலைகள் உருகி, கடல் நீர்மட்டம் உயருகிறது. இதனால், நில அளவு குறையும். பூமி வெப்பமாவதைத் தடுக்க வளி

மண்டலத்தில் கலக்கும் கார்பன் அளவை குறைக்க வேண்டும். இதற்கு, மரக் கன்றுகளை அதிக அளவில் நடவேண்டும். மேலும், மரபுசாரா எரிசக்திகளான சூரியஒளி, பயோ-கேஸ் முறையைப் பயன்படுத்த வேண்டும்.

அறிவியல் தொழில்நுட்பத்தில் புதியவற்றை உருவாக்கி, தனது திறமையை வெளிகொண்டு வருவதன் மூலமே ஒருவரை சிறந்தவராகக் கருத இயலும். எனவே, மாணவர்கள் ஆர்வத்துடன் ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும் என்றார்.

நிகழ்ச்சிக்கு, கல்லூரி முதல்வர் எஸ். அறிவழகன் தலைமை வகித்தார். முன்னதாக, ஒருங்கிணைப்பாளர் எஸ். கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார்.

**ராஜபாளையத்தில் காய்கறிகள் விலை அதிகரிப்பு**

தொடர் மழையால் ராஜபாளையம் பகுதியில் காய்கறிகள் விலை கடுமையாக அதிகரித்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர் மழை பெய்ததால், பெரும்பாலான காய்கறித் தோட்டங்கள் சேதமடைந்து உற்பத்தி பாதித்துள்ளது. விளைச்சல் குறைந்து சந்தைக்கு குறைவான அளவே காய்கறிகளின் வரத்து உள்ளதால், விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ராஜபாளையம் காய்கறிச் சந்தையில் கத்தரிக்காய் கிலோ ரூ. 100, தக்காளி பழம் ரூ. 60, வெங்காயம் ரூ. 60, அவரைக்காய் ரூ. 60, எலுமிச்சை ரூ. 60 என பெரும்பாலான காய்கறிகளின் விலை 20 சதவீதம் முதல் நூறு சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

**ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் நெல் விதைப் பண்ணைகள் ஆய்வு**

திருவாடானை தாலுகா ஆர்.எஸ்.மங்கலம் அருகே கீழ்பனையூர் மற்றும் கூடலூர் பகுதியில் விதைப் பண்ணையை வேளாண் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். திருவாடானை தாலுகா ஆர்.எஸ்.மங்கலம் வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் சுமார் 19ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு விதைச் சான்றுத் துறையின் மேற்பார்வையில் 125 ஹெக்டேரில் நெல் விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது. விதைப் பண்ணைகளை விதைச்சான்று உதவி இயக்குநர் ஷேக் அப்துல்லா ஆய்வு செய்து, விதைப்பண்ணை வயல்களில் களைகள் நீக்குதல், உர சிபாரிசு, கலவன் நீக்குதல், பயிர் விலகு தூரம் கடைபிடித்தல் மற்றும் பூச்சி நோய் மேலாண்மை

குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார். ஆய்வின்போது விதைச்சான்று அலுவலர் பொன்னுசாமி, வேளாண்மை அலுவலர் உலகுசுந்தரம் ஆகியோர் உடனிருந்தனர்.

**ரூ.1.55 கோடிக்கு காய்கறிகள் விற்பனை**

தாராபுரம் உழவர் சந்தையில் கடந்த நவம்பர் மாதம் ரூ.1.55 கோடிக்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து வேளாண் துறை விற்பனைப் பிரிவு அதிகாரிகள் கூறியதாவது:

இந்தச் சந்தைக்கு தாராபுரம், குண்டடம், மூலனூர் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

கடந்த நவம்பர் மாதம் 4,212 உழவர்கள் 5.12 லட்சம் கிலோ காய்கறிகளை இங்கு விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதை 73 ஆயிரத்து 220 நுகர்வோர் வாங்கி பயன்பெற்றுள்ளனர். இதன் மதிப்பு ரூ.1 கோடியே 55 லட்சத்து 55 ஆயிரத்து 700 ஆகும் என்றனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 76.52 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 76.52 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 3,556 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றிலும், வாய்க்காலிலும் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 13.9 டி.எம்.சி.

**மரவள்ளிக் கிழங்கு விலை திடீர் உயர்வு**

பரமத்திவேலூர் சுற்றுவட்டாரப் பகுதியில் மரவள்ளிக் கிழங்கு விலை திடீரென உயர்ந்தது. பரமத்திவேலூர் பகுதியில் ஏராளமான ஏக்கரில் மரவள்ளிக் கிழங்கு பயிர் செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் மரவள்ளிக் கிழங்குகளை நாமக்கல், ராசிபுரம், சேலம், நாமகிரிபேட்டை, ஆத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஜவ்வரிசி ஆலைகளைச் சேர்ந்த உரிமையாளர்கள் வாங்கிச் செல்கின்றனர். மரவள்ளிக் கிழங்கில் இருந்து ஜவ்வரிசி மற்றும் பல்வேறு

வகையான ஜிப்சங்கள் தயார் செய்யப்படுவதோடு, உணவாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த சில மாதங்களாக மரவள்ளிக் கிழங்கு டன் ஒன்று ரூ.2 ஆயிரத்து 400-க்கு வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். இப்போது மரவள்ளிக் கிழங்கின் வரத்துக் குறைந்துள்ளதால், அதன் விலை உயர்ந்துள்ளது. இப்போது மரவள்ளிக் கிழங்கு டன் ஒன்று ரூ.4 ஆயிரத்துக்கு வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர்.

பல்வேறு அரசியல் கட்சியினர் மரவள்ளிக் கிழங்குக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்தநிலையில், மரவள்ளிக் கிழங்கின் விலை உயர்ந்து வருவதால், மரவள்ளி பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**முட்டை விலை**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.65, சென்னையில் ரூ.3.75.

**கறிக்கோழி விலை**

பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக்குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.54, முட்டைக்கோழி கிலோ ரூ.54.

**விதை கிராமத் திட்ட விவசாயிகளுக்குப் பயிற்சி**

கந்தர்வகோட்டை அருகே குன்றாண்டார்கோவில் வட்டாரத்தில் அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ், விதை கிராமத் திட்ட விவசாயிகள் பயிற்சி முகாம் மின்னாத்தூர் கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது.

புதுகை வேளாண் இணை இயக்குநர் டி. சந்திரசேகரன் தலைமை வகித்தார். குன்றாண்டார்கோவில் வேளாண் உதவி இயக்குநர் மு. சங்கரலட்சுமி வரவேற்றார். பயிற்சியின்போது, புதுகை மாவட்ட விதைச் சான்று அலுவலர் பாண்டியன் உளுந்து பயிரில் தரமான விதை உற்பத்தி செய்வதன் முக்கியத்துவத்தை விளக்கினார். வம்பன் வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் சுவாமிநாதன் பயறு வகை பயிர்களில் அதிக மகசூலை

பெறுவதற்கான தொழில்நுட்பங்கள் மற்றும் பூச்சி, நோய் கட்டுப்படுத்தும் முறைகளை எடுத்துரைத்தார்.

கே.எஸ். ஆதவா வேளாண் துறையில் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள் மற்றும் இயந்திர நடவு மூலம் நெல் சாகுபடி செய்வதன் முக்கியத்துவத்தை விளக்கினார். வேளாண் அலுவலர் வேல்முருகன், உளுந்து பயிரில் பூச்சி கட்டுப்பாட்டு முறைகளை வயல்வெளியில் செய்துகாட்டினார்.

பயிற்சியில், மின்னாத்தூர் மற்றும் பாப்புடையான்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் 40 பேர் பங்கேற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர்கள் ந. நிஷா, சு. பால்சாமி, மற்றும் கா. சுப்ரமணியன் ஆகியோர் செய்திருந்தனர்.

**நெல் பண்ணைப் பள்ளியில் பூச்சிகள் குறித்து வேளாண் அதிகாரிகள் விளக்கம்**

பட்டுக்கோட்டையை அடுத்த பண்ணவயல் கிராமத்தில் நெல் பண்ணைப் பள்ளியில் பூச்சிகள் தொடர்பாக வேளாண் அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை (2-ம் வகுப்பில்) விளக்கமளித்தனர்.

இதில் நன்மை, தீமை செய்யும் பூச்சிகள் மற்றும் நடுநிலைப் பூச்சிகள் குறித்து வேளாண் அலுவலர் எஸ். வெங்கடாசலம், மைக்கோரைசா பூஞ்சாணம் குறித்து வேளாண் ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் முனைவர் பாரதி ஆகியோர் பேசினர். வேளாண் அலுவலர் எஸ். சங்கீதா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் சி. சுகிதா, உதவி வேளாண் அலுவலர்கள் ரமணி, ஆர். ராமன், உதவித் தொழில் நுட்ப மேலாளர் த. ரவி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பட்டுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர் மு. சுப்பையா தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குநர் (மத்திய திட்டம்) நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார். உதவித் தொழில் நுட்ப மேலாளர் வி. ரமேஷ் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு நெல்நடவு இயந்திரம் வழங்கல்**

நாசரேத் அருகே உடையார்குளத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் மானியத்தில் நெல்நடவு இயந்திரம் வழங்கும் விழா மற்றும் இயந்திரம் செயல்முறை விளக்கம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட வேளாண் இணை

இயக்குநர் ஜெயக்குமார் தலைமை வகித்தார். ஆழ்வார்திருநகரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மா.பாலசுப்பிரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செந்தில்வேல்முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உடையார்குளம் விவசாயி செல்வின் கோயில்ராஜிக்கு மானியத்தில் நெல் நடவு இயந்திரம் வழங்கப்பட்டது. நிறுவன பிரதிநிதி சீனிவாசன், விவசாயிகளுக்கு இயந்திரத்தை இயக்கி செயல்முறை விளக்கம் அளித்தார். நிகழ்ச்சியில், வட்டார வேளாண்மை அலுவலர் கதிரேசன், உதவி வேளாண்மை அலுவலர்கள் அருணாசலம், கண்ணன், தொழில்நுட்ப மேலாளர் ஜேசுதான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தினகரன்

**துவரம் பருப்பு விலையை தொடர்ந்து பூண்டு விலை கடும் உயர்வு: கிலோவுக்கு ரூ.100 வரை அதிகரிப்பு**




சென்னை: பருப்பு விலையை தொடர்ந்து பூண்டு விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. கிலோவுக்கு ரூ.100 வரை அதிகரித்துள்ளது. துவரம் பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைகளின் விலை கடந்த மாதம் வரலாறு காணாத வகையில் உயர்ந்தது. அதாவது, கிலோ ரூ.250 வரை விற்பனையானது. இதனால், பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். விலை உயர்வை

கட்டுப்படுத்த மத்திய அரசு வெளிநாடுகளில் இருந்து பருப்பை இறக்குமதி செய்தது. மேலும் அதிரடி சோதனை நடத்தி பதுக்கி வைத்திருந்த பருப்பை பறிமுதல் செய்தது. இதனால், தற்போது துவரம் பருப்பு ரூ.170 என்ற பழைய விலைக்கே திரும்பியுள்ளது. இந்த விலை உயர்வு அடங்குவதற்குள் தற்போது பூண்டு விலையும் வரலாறு காணாத வகையில் அதிகரிக்க தொடங்கியுள்ளது. இந்தியாவிற்கு மலைப்பூண்டு சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இது தற்போது அடியோடு நின்றுள்ளது. அது மட்டுமல்லாமல் தமிழகத்தில் தேனி, கம்பம், போடி உள்ளிட்ட பகுதியில் பூண்டு விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் பூண்டுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கடந்த வாரம் ரூ.150க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ மலைப்பூண்டு தற்போது ரூ.250ஆக உயர்ந்துள்ளது. மலைப்பூண்டு (2ம் ரகம்) ரூ.120லிருந்து ரூ.220 ஆக விலை அதிகரித்துள்ளது. நாட்டுப்பூண்டு ரூ.120லிருந்து ரூ.200, நாட்டுப்பூண்டு (2ம் ரகம்) ரூ.100லிருந்து ரூ.170 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு ெபாதுமக்களுக்கு ேமலும் கூடுதல் சுமையை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறுகையில், “இந்தியாவில் குஜராத், மத்திய பிரதேசத்தில் பூண்டு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. கடந்த மாதம் பருப்பு விலை உயர்வை தொடர்ந்து, விவசாயிகள் பூண்டு உற்பத்தியை நிறுத்தி விட்டு தற்போது பருப்பு உற்பத்தியில் இறங்கியுள்ளனர். மேலும், வடமாநிலங்களில் பூண்டு அதிக அளவில் பதுக்கப்பட்டுள்ளது. இதுவே பூண்டு விலை உயர்வுக்கு காரணம். ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் புது வரத்து வந்த பிறகே பூண்டு விலை கிலோவுக்கு ரூ.50 முதல் ரூ.80 வரை குறைய வாய்ப்புள்ளது. அது வரை அதிகரிக்கத்தான் செய்யும்” என்றார்.

**ஆரோக்கியப் பெட்டகம்: கருணைக்கிழங்கு**



கிழங்கு வகைகளில் குழந்தைகள் முதல் பெரியவர் வரை எல்லோரின் ஏகோபித்த வரவேற்பும் உருளைக்கிழங்குக்குத்தான். எப்படிச் செய்தாலும், எதனுடன் சேர்த்தாலும் ருசியில் அசத்தும். ஆனால், வேறெந்த கிழங்குகளிலும் இல்லாத அளவுக்கு அதிக சத்துகளையும் மருத்துவக் குணங்களையும் கொண்ட கிழங்கு என்றால் அது கருணைக் கிழங்குதான்!பெயரிலேயே கருணையைக் கொண்ட இது, நிஜமாகவே பலவிதமான நோய்களுக்கு எதிராகப் போராடி, நம் ஆரோக்கியம் காக்கும் விஷயத்தில் கருணையாக நடந்து கொள்கிறது.

கருணைக்கிழங்கை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் உணர்த்தி, அதிலுள்ள மருத்துவக் குணங்களையும் பற்றிப் பேசுகிறார் டயட்டீஷியன் அம்பிகா சேகர். கூடவே கருணைக்கிழங்கை வைத்து 3 ஆரோக்கிய ரெசிபிகளையும் செய்து காட்டுகிறார்.

**என்ன இருக்கிறது? (100 கிராம் அளவில்)**

ஆற்றல் - 330கிலோகலோரிகள்

கால்சியம் - 56மி.கி.

கார்போஹைட்ரேட்- 18-24%

நார்ச்சத்து - 8%

நீர்ச்சத்து -79%

புரதச்சத்து -5%

ஒமேகா3-கொழுப்பு அமிலம் அதிகமுள்ள கிழங்கு இது.

இது மலைப்பிரதேசங்களில் அதிகம் கிடைக்கும் கிழங்கு. இலைகளை கூட வட மாநிலங்களில் சமைப்பார்கள். தென் மாநிலங்களில் கிழங்கையே பெரிதும் பயன்படுத்துகிறோம். சுவையான இந்த கிழங்கை தேர்ந்தெடுக்கும் போது புதிய கிழங்கை தேர்ந்தெடுக்க வேண்டும். காய்ந்து விட்டால் நீர்ச்சத்தும் சுவையும் குறைந்து விடும். நறுக்கும் போது கையில் உறையோ (அ) சிறிதளவு நல்லெண்ணெய் தடவிக் கொண்டோ நறுக்க வேண்டும். சில நேரம் கைகளில் எரிச்சல் உண்டாகும். சமைக்கும் போது சிறிதளவு புளிக்கரைசல் சேர்த்து சமைத்தால் நாக்கு நமைச்சல் தவிர்க்கப்படும். வாங்கிய ஒரு வாரத்துக்குள் சமைப்பது நல்லது.

**மருத்துவப்பயன்கள்**

பருமன் குறைப்பதற்கு சாதத்துக்குப் பதில் பயன்படுத்தலாம். உயர் ரத்த அழுத்தத்தை குறைக்கப் பயன்படுகிறது. மூல நோய் (Piles) பிரச்னையை குணப்படுத்தப் பயன்படுகிறது. ரத்தத்தில் இருக்கும் அதிக கொழுப்பைக் குறைக்கப் பயன்படுகிறது. ரத்தம் உறைதலை துரிதப்படுத்துகிறது. சர்க்கரை நோய் உள்ளவர்கள் கிழங்குகளைத் தவிர்க்க வேண்டும். ஆனாலும், கருணைக்கிழங்கு மட்டும் எடுத்துக் கொள்ளலாம். பெண்களின் ஹார்மோன் பிரச்னைகளைக் கூட கட்டுப்படுத்தும். முக்கியமாக 40 வயதுக்கு மேல் வரும் மெனோபாஸ் பிரச்னையின் போது, பெண்களின் ஈஸ்ட்ரோஜன் அளவை இது அதிகப்படுத்துகிறது. ருமாட்டிசம் எனும் முடக்குவாதம் உள்ளவர்கள் இதை வாரம் 2 முறை சாப்பிட்டால் நோய் குணமாகும். வைட்டமின் சி சத்தும் ஆன்ட்டி ஆக்சிடென்ட்டுகளும் அதிகம் உள்ளன. மலச்சிக்கலுக்கும் மருந்தாக உதவும். கருணைக்கிழங்கு உடலை குளிரச் செய்யும் உணவு என்பதால் ஆஸ்துமா இருப்பவர்கள் தவிர்க்க வேண்டும்.

**எப்படி வாங்க வேண்டும்?** பார்ப்பதற்கு ஃப்ரெஷ்ஷாக இருக்க வேண்டும். கையில் கிளவுஸ் அணிந்தபடி தேர்வு செய்வது, கிழங்கின் மூலம் கைகளில் உண்டாகும் அரிப்பைத் தவிர்க்கும்.

**ரெசிபி**

**பிடிகருணை குழம்பு**

**என்னென்ன தேவை?**

பிடிகருணை - 1/4 கிலோ, புளிக்கரைசல் - 1 கப், குழம்பு மிளகாய்த்தூள் - 3 டீஸ்பூன், வெங்காயம் நறுக்கியது - 1, தக்காளி - 1, மஞ்சள்தூள் - 1/4 டீஸ்பூன், பூண்டு - 10 பல், நல்லெண்ணெய் - 3 டீஸ்பூன், மிளகு - 1 டீஸ்பூன், கறிவேப்பிலை - சிறிது, கடுகு, வெந்தயம் - தாளிக்க, உப்பு - தேவைக்கு. **எப்படிச் செய்வது?** முதலில் கிழங்கை உப்பு, புளிய இலை அல்லது சிறிதளவு புளி சேர்த்து வேக வைக்கவும். பின் தோல் நீக்கி வட்டத் துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். ஒரு கடாயில் எண்ணெய் சேர்த்து கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை தாளித்து, பின் பூண்டு வதங்கியதும், வெங்காயம், தக்காளி, உப்பு சேர்த்து நன்றாக வதங்கியதும் கிழங்கு, மிளகாய்த்தூள், மஞ்சள்தூள் சேர்த்து புளிக்கரைசலை சேர்த்து கொதிக்க விடவும். கெட்டியாகி இறக்கும் முன் 1 டீஸ்பூன் மிளகை ஒன்றும் பாதியுமாக தட்டி சேர்த்து இறக்கவும்.

**கருணைக்கிழங்கு புட்டு**

**என்னென்ன தேவை?**

கருணைக்கிழங்கு - 1/4 கிலோ, வெங்காயம் - 2, பச்சை மிளகாய் - 1, தக்காளி - 1, இஞ்சி-பூண்டு விழுது - 1 டீஸ்பூன், மஞ்சள்தூள், உப்பு - தேவைக்கு, எண்ணெய் - 2 டீஸ்பூன், கடுகு, சீரகம், உளுந்து - தாளிக்க. அரைக்க: பூண்டு - 5 பல், காய்ந்த மிளகாய் - 2, தேங்காய் - 30 கிராம், வேர்க்கடலை - 1/2 டீஸ்பூன்.

**எப்படிச் செய்வது?**

கருணைக்கிழங்கை வேக வைத்து மசித்துக் கொள்ளவும். ஒரு கடாயில் எண்ணெய் சேர்த்து கடுகு, மஞ்சள் தூள், உப்பு, உளுந்து, சீரகம் தாளித்து இஞ்சி-பூண்டு விழுது, வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய் ஒன்றன் பின் ஒன்றாக சேர்த்து வதக்கவும். பின் மசித்த கிழங்கை சேர்த்து வதக்கவும். நன்றாக வெந்தவுடன் அரைத்த மசாலாவை சேர்த்து இறக்கவும். மல்லி இலை தூவி பரிமாறவும்.

**கருணைக்கிழங்கு மஞ்சூரியன்**

**என்னென்ன தேவை?**

கருணைக்கிழங்கு - 1/4 கிலோ, சோள மாவு அல்லது அரிசி மாவு - 1 டீஸ்பூன், மிளகாய் தூள் - 1 டீஸ்பூன், மஞ்சள் தூள் - 1/4 டீஸ்பூன், தனியா தூள் - 2 டீஸ்பூன், உப்பு - தேவைக்கு, தக்காளி - 1, வெங்காயம் - 1, குடை மிளகாய் - 100 கிராம், பச்சை மிளகாய் - 1, பூண்டு - 5 பல், இஞ்சி - 1 சிறிய துண்டு, எண்ணெய்-3டீஸ்பூன்.

**எப்படிச் செய்வது?**

முதலில் கருணைக்கிழங்கை சிறு துண்டுகளாக நறுக்கி சோள மாவு, மிளகாய் தூள், தனியா தூள், மஞ்சள் தூள், உப்பு சேர்த்து 10 நிமிடங்கள் ஊற வைக்கவும். பிறகு 2 டீஸ்பூன் எண்ணெயில் லேசாக வறுத்துக் கொள்ளவும்.பிறகு தனியே 1 டீஸ்பூன் எண்ணெயில் இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய் சேர்த்து வதக்கவும். பிறகு வெங்காயம், தக்காளி சேர்த்து வதங்கியதும் சிறிது தண்ணீர் தெளித்து வறுத்து வைத்துள்ள கிழங்கை சேர்த்துக் கிளறவும். அடுத்து பொடியாக நறுக்கிய குடை மிளகாயும் சேர்த்து வதக்கிப் பரிமாறவும்.

**மூலத்தை குணப்படுத்தும் துவரை**




உடல் எடையை குறைக்கும் தன்மை கொண்டதும், மூல நோய்க்கு மருந்தாக பயன்படக் கூடியதும், ஈரலுக்கு பலத்தை கொடுக்க வல்லதும், பல் வலியை குணப்படுத்த கூடியதும், சத்தான உணவாக இருப்பதுமான துவரை முக்கிய உணவு பொருளாக உள்ளது. துவரம் பருப்பு சமையலில் முக்கிய பங்கு வகிக்கிறது. துவரை காய்களின் உள்ளே இருக்கும் பருப்பை உலர்த்தி

உடைத்து அதை சமையலுக்கு பயன்படுத்தி வருகிறோம். துவரை செடியானது உயரமாக வளரக் கூடியது. மஞ்சள் நிற பூக்களை உடையது. பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட துவரை, கொழுப்பு சத்தை குறைக்கும். உடலுக்கு பலம் கொடுக்க கூடியது. சத்துக்கள் நிரம்பிய துவரை, உடல் எடையை குறைக்கும் தன்மை உடையது. துவரை செடியின் வேரை பயன்படுத்தி மூலத்தினால் உண்டாகும் சதை வளர்ச்சியை குணப்படுத்தும் மருந்து தயாரிக்கலாம். வேரை சிறு துண்டுகளாக வெட்டி சுத்தப்படுத்தி எடுத்து கொள்ளவும். அதனுடன், அரை ஸ்பூன் சோம்பு, சிறிது பனங்கற்கண்டு சேர்க்கவும். பின்னர், ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு நன்றாக வேக வைக்க வேண்டும். இதை வடிகட்டி குடிப்பதனால் மலச்சிக்கல் சரியாகும். உள் மற்றும் வெளி மூலம் ஆகியவை குணமாகும். துவரை இலைகளை பயன்படுத்தி பல் வலி, ஈறு வீக்கத்துக்கான மருந்து தயாரிக்கலாம். ஒருபிடி அளவுக்கு துவரை இலைகளை எடுத்து கொள்ளவும். அதனுடன், சிறிது மிளகுப் பொடி, சிறிது உப்பு சேர்த்து, நீர் ஊற்றி கொதிக்க வைக்க வேண்டும். இதை கொண்டு வாய் கொப்பளித்து வந்தால், பல் வலி சரியாகும். ஈறுகளில் ஏற்படும் வீக்கம், ரத்தக் கசிவு குணமாகும்.துவரம் பருப்பை பயன்படுத்தி பசியை தூண்டக் கூடியதும், மலச்சிக்கல் இல்லாமல் குடலை பாதுகாக்க கூடியதுமான சூப் தயாரிக்கலாம். இதற்கு தேவையான பொருட்கள்: துவரம் பருப்பு, உப்பு, சீரகப் பொடி, மிளகுப் பொடி, பெருங்காயப் பொடி.வேக வைத்து மசித்த துவரம் பருப்பை 2 ஸ்பூன் எடுத்துக் கொள்ளவும். அதனுடன், 2 சிட்டிகை பெருங்காயப் பொடி, சிறிது மிளகுப் பொடி, சிறிது சீரகப் பொடி, உப்பு சேர்க்கவும். பின்னர், நீர்விட்டு சூப்பு போன்று தயாரிக்கவும். இதை குடித்துவர மலச்சிக்கல் சரியாகும். அஜீரண கோளாறுகள் குணமாகும். சுவையான சத்துக்கள் நிறைந்த துவரம் பருப்பு, ரத்த குறைபாட்டை போக்கும் தன்மை கொண்டது. கொழுப்பை கரைத்து உடல் எடையை குறைக்கும். துவரை இலைகள் பற்களில் உள்ள கிருமிகளை அழிக்கும். வேர்கள் மூலத்தை குணப்படுத்த கூடியது. துவரம் பருப்பை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்வதால் வயிற்று புண்கள் ஆறும். ஈரல் கெட்டுப்போகாமல் தடுப்பதுடன், அதற்கு பலம் கொடுக்கிறது. துவரம்

பருப்பை பயன்படுத்தி வந்தால் பல்வேறு நோய்களில் இருந்து விடுதலை பெறலாம்.


**மலச்சிக்கலை கட்டுப்படுத்தும் பண்ணை கீரை**



பூவைப் போன்ற கதிர்களை பெற்றிருக்கக் கூடிய இந்த கீரை வகையின் தாவர பெயர் செலோசியா அர்ஜென்டியா என்று அழைக்கப்படுகிறது. இதன் இலைகள் நீண்ட வடிவத்தை கொண்டவையாக விளங்குகின்றன. அதன் தண்டுகள் நாயுருவி செடியைப் போன்று காணப்படுகின்றன. அகத்தி மற்றும் வேர்கடலையுடன் ஊடு பயிராகவும் வளர்க்கப்படுகிறது. இந்த பண்ணை கீரை அருமையான உணவாகவும், மருந்தாகவும் பயன்படக் கூடியது. இந்த கீரை ரத்தத்தை உறைய வைக்கும் பண்பை பெற்றிருக்கிறது. கற்களை உடைத்து கரைக்கும் தன்மை இதற்கு உள்ளது. இதனால் சிறுநீரகங்களில் ஏற்படும் கற்களை கரைக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தக் கூடிய தன்மையும் இந்த கீரைக்கு உள்ளது. இதில் காணப்படும் வைட்டமின்கள், தாது உப்புகள், அமினோ அமிலங்கள் அனைத்தும் உடலுக்கு ஊக்கத்தை அளிப்பதாக விளங்குகிறது. குடலை பலப்படுத்தக் கூடிய மருந்து ஒன்றை பண்ணை கீரையின் இலைகளை பயன்படுத்தி தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் பண்ணை கீரை இலைகள், சோம்பு, பனங்கற்கண்டு. ஒரு பிடி அளவு பண்ணை கீரை இலைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் அரை ஸ்பூன் சோம்பு, பனங்கற்கண்டு சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனுடன் நீர் விட்டு ஒரு கஷாயத்தை தயார் செய்து கொள்ளலாம். இதை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். வயிற்றில் உள்ள, வாயில் உள்ள புண்களை ஆற்றும் குணமும் பண்ணை கீரைக்கு உள்ளது. வயிற்றில் உள்ள பூச்சிகளை வெளியில் தள்ளி விடுவதால், இதை பருகுவதன் மூலம் மலச்சிக்கல்

பிரச்னை தீரும். அது மட்டும் இன்றி குடலை பலப்படுத்துவதற்கும் இந்த பண்ணை கீரை மருந்தாகிறது. கேழ்வரகு களியுடன் பண்ணை கீரையை புளியுடன் கடைந்த கடைசலை சேர்த்து சாப்பிடுவதன் மூலம் உடலுக்கு ஊட்டமும் ஊக்கமும் கிடைக்கிறது. அதே போல பண்ணை கீரையின் பூக்களை பயன்படுத்தி கழிச்சல் மற்றும் பெரும்பாட்டை கட்டுப்படுத்துவதற்கான மருந்தை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் பண்ணை கீரையின் பூக்கள், பனங்கற்கண்டு. 5 அல்லது 6 பூக்களை எடுத்துக் கொள்ள வேண்டும். கொஞ்சம் பனங்கற்கண்டு சேர்க்க வேண்டும். ஒரு டம்ளர் நீர் சேர்த்து தேநீராக்கி தயார் செய்து கொள்ள வேண்டும். இதை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படக் கூடிய பெரும்பாடு என்கிற பிரச்னை மற்றும் கழிச்சல் எனப்படும் சீத பேதி ஆகியவற்றை கட்டுப்படுத்தும் குணம் இதற்கு உள்ளது. இவ்வாறு பல்வேறு மருத்துவ குணங்களை பெற்றுள்ள பண்ணை கீரையை நாம் அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் உடல் ஊக்கமும் நலமும் பெறலாம்.

**140 அடியை எட்டியது முல்லைப்பெரியாறு அணை : பொறியாளர்கள் விடிய,விடிய கண்காணிப்பு**



மதுரை: முல்லைப் பெரியாறு அணை நேற்று 140 அடியை எட்டியது. தொடர்மழை காரணமாக முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்றுமுன்தினம் 138.80 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்றுகாலை 139.50 அடியாக உயர்ந்தது. மாலையில் 140 அடியை எட்டியது. நீர்வரத்து வினாடிக்கு 2,755 கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் நீர்மட்டம்

மளமளவென உயர்கிறது. வினாடிக்கு 511 கன அடி மட்டும் திறக்கப்படுகிறது. மழை நீடிப்பதால் 142 அடியை எட்டுவதற்கான வாய்ப்பு உள்ளது. பொதுப்பணித்துறை பொறியாளர் ஒருவர் கூறுகையில், ' கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும், 142 அடி வரை தண்ணீரை தேக்க முடியும். மழை கை கொடுத்து நீர்வரத்தும் அதிகரித்துள்ளது. இதனால், பொறியாளர்கள் முகாமிட்டு இரவு, பகலாக விடிய விடிய மழை நிலவரம், நீர்வரத்து, நீர்மட்டத்தை தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர். 142 அடியை எட்டியதும், கூடுதலாக வரும் நீர், கேரளா நோக்கிச் சென்று விடாமல், தமிழகம் நோக்கி திறக்கப்பட்டு வைகை அணையில் நிரப்பப்படும்,'' என்றார்.

**துடியலூர் சித்த மருத்துவமனையில் 5 ஆயிரம் பேருக்கு நிலவேம்பு கசாயம்**

பெ.நா.பாளையம், : கோவை துடியலூரில் உள்ள அரசு சித்த மருத்துவமனையில் ஒரு வாரத்தில் 5 ஆயிரம் பேருக்கு இலவச கசாயம் கொடுக்கப்பட்டு உள்ளது. சமீபத்தில் பெய்த மழையினால் காய்ச்சல் பரவி வருகிறது இதை தடுப்பதற்காக தமிழக அரசின் சார்பில் மருத்துவமனையில் நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டு வருகிறது. துடியலூரில் உள்ள அரசு சித்த மருத்துவமனையில் கடந்த ஒரு வாரமாக மழை கால சிறப்பு சித்த மருத்துவ முகாமில் சுமார் 5 ஆயிரம் பேருக்கு இந்த கசாயம் வழங்கப்பட்டது. வட்டார மருத்துவ அதிகாரி சங்கீதா, சித்த மருத்துவர் பாரதி ஆகியோர் கொண்ட மருத்துவ குழுவினருடன் இணைந்து ஊர்க்காவல் படையினர், மாநகராட்சி கவுன்சிலர்கள் இணைந்து இந்த பணியை மேற்கொண்டனர் காய்ச்சல் உள்ளவர்களுக்கு நிலவேம்பு கசாயம் குடித்தால் உடனடியாக காய்ச்சல் குறைவதால் இதை வாங்கி குடிக்க மருத்துவமனைக்கு பொது மக்கள் அதிகளவில் வருகின்றனர்.

**கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.17.62 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனை**

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த ஏலத்தில் மஞ்சள் ரூ.17.62 லட்சத்திற்கு விற்பனையானது. கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 115

குவின்டாலும், கிழங்கு ரகம் 35 குவின்டாலும் என மொத்தம் 150 குவின்டால் விற்பனையானது. வழுக்குப்பாறை, பூலுவபட்டி, இருட்டுப்பள்ளம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதை கோவை, பொள்ளாச்சி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். விலை விரலி மஞ்சள் குவின்டால் ரூ.8,650 முதல் ரூ.9,888 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.9,600. விற்பனை மதிப்பு ரூ.14.40 லட்சம். கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.8,700 முதல் ரூ.9,400 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.9,200. விற்பனை மதிப்பு ரூ.3.22 லட்சம். இரண்டு ரகமும் சேர்ந்து ரூ.17.62 லட்சத்திற்கு விற்றது. இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.3.13 லட்சம் அதிகமாகும். எனினும் விரலி மஞ்சள் கடந்த ஏலத்தை காட்டிலும் குவின்டாலுக்கு ரூ.100ம் விரலி மஞ்சள் குவின்டாலுக்கு ரூ.300ம் குறைந்துள்ளது. மஞ்சள் விலை கடந்த 3 வாரமாக அதிகரித்த நிலையிலேயே உள்ளது. எனினும் வரத்து குறைவாக உள்ளது.

**குறிச்சியில் 2 ஆயிரம் டன் உணவு தானியம் சேமிக்க கிடங்கு**

கோவை, : கோவை மதுக்கரை தாலூகாவிற்குட்பட்ட ரேஷன் கடைகளுக்கு கோவை நகரில் இருந்து உணவு தானியங்கள் அனுப்பி வைக்கப்படுகிறது. லாரி மூலமாக ரேஷன் பொருட்கள் கடைகளுக்கு வினியோகம் செய்ய காலதாமதம் ஏற்படுவதாக தெரிகிறது. இதை தொடர்ந்து மதுக்கரை வட்டார பகுதி ரேஷன் கடைகளுக்காக மதுக்கரை ரோடு குறிச்சி பகுதியில் புதிதாக சேமிப்பு கிடங்கு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலமாக 2 ஆயிரம் டன் அளவிற்கு உணவு தானியம் சேமிப்பு வகையில் 2 குடோன் 1.14 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இதில் அரிசி, கோதுமை, சர்க்கரை, பாமாயில், உளுத்தம்பருப்பு, துவரம்பருப்பு போன்றவை இருப்பு வைக்கப்படும். மதுக்கரை ரோட்டில் உழவர் சந்தை வளாகம், ரயில்வே மேம்பாலம் சுற்றுப்பகுதியில் உள்ள காலியிடம் போன்றவற்றில் கிடங்கு அமைக்க இடம் தேடும் பணி நடக்கிறது. புதிய கிடங்கு அமைக்கப்பட்டால் மதுக்கரை தாலூகா பகுதியில் ரேஷன் பொருட்கள் வினியோகம் தாமதமின்றி வேகமாக நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வரட்டுப்பள்ளம் அணை நிரம்பியதால் ஏரிகளுக்கு நீர்வரத்து: விவசாயிகள் மகிழ்ச்சி**

அந்தியூர், :அந்தியூரை அடுத்துள்ள வரட்டுப்பள்ளம் அணை 33.5 அடி உயரமும், 1798 மீட்டர் நீளமும் 139.6 மில்லியன் கன அடி கொள்ளளவும் கொண்டதாகும். இந்த அணைக்கு பர்கூர், தாமரைக்கரை, தாளக்கரை, தேவர்மலை, மடம் ஆகிய வனப்பகுதிகளில் மழை பெய்யும் சமயத்தில் கும்பரவானி, கள்ளுப்பள்ளம், வரட்டுப்பள்ளம் உள்ளிட்ட பள்ளங்கள் வழியாக அணைக்கு நீர்வரத்து இருக்கும். இந்த அணையினால் 3 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவு நிலம் பாசன வசதி பெறுகின்றது. வாழை, கரும்பு, பருத்தி, மஞ்சள், எள் போன்ற பணப்பயிர்கள் சாகுபடி செய்து விவசாயிகள் பயன் பெறுகின்றனர். கடந்த 15 நாட்களுக்கு முன்பு பர்கூர் மலைப்பகுதியில் பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக வரட்டுப்பள்ளம் அணை நிரம்பி வழிந்தது. இந்நிலையில் நேற்று பர்கூர் வனப்பகுதியில் பெய்த கனமழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்ததால் அணையில் இருந்து தொடர்ந்து உபரிநீர் அதிகளவில் வெளியேறிக்கொண்டுள்ளது. கிழக்கு பகுதியில் வெளியேறும் தண்ணீர் கொட்டி சமுத்திரம் ஏரிக்கும், மேற்கு பகுதியில் இருந்து வெளியேறும் தண்ணீர் அந்தியூர் கொல்லபாளையம் ஏரிக்கும் செல்கிறது. இது நாள் வரை பெய்த மழையால் ஏரிக்கு நீர்வரத்து இல்லாத நிலையில் நேற்று வரட்டுபள்ளம் அணையில் இருந்து இரண்டு ஏரிக்கும் தண்ணீர் வந்து கொண்டிருப்பதால் ஏரியை சுற்றியுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.